இலங்கையின் முதல் தமிழ்க் கத்தோலிக்க வார ஏடு

# பாதுகாவலன்

# PAATHUKAVALAN

1876 – 2026

150 ஆண்டுகள்

Registered in the Department of Post of Sri Lanka No. QD/119/News/2020. Founded 19 Feb.1876

St.Joseph's Catholic Press, 360 Main Street, Jaffna, Sri Lanka. Tel: 021 - 222 2378 | Fax: 021 - 222 9041 | E-mail: editorkavalan@gmail.com, ISSN 1391-7633

மலர் : 150 | இதழ் : 06 | திகதி : 17.05.2026 | விலை : 50.00

### கூட்டொருங்கியக்கத் திருஅவையின் செயற்பாடுகளை மேம்படுத்தி நடைமுறைப்படுத்துவதற்காக

## இலங்கை கத்தோலிக்க ஆயர் பேரவையின் சுற்றுமடல்

அன்புமிக்க இலங்கை வாழ் இறை மக்களே,

ஆண்டவரைக் கண்டதால் சீடர்கள் மகிழ்ச்சி கொண்டார்கள்" (யோவான் 20:20). நாம் பாஸ்காக் காலத்தில் இருப்பதால் உயிர்த்த ஆண்டவரின் ஆசீர்வாதங்களை வழங்கி கத்தோலிக்க ஆயர் பேரவையானது உங்களை மகிழ்வுடன் வாழ்த்தி நிற்கின்றது. 2026ஆம் ஆண்டு வைகாசி மாதம் 1ஆம் திகதி தொழிலாளரான புனித சூசையப்பரின் திருவிழா கொண்டாட்டத்தின் போது இலங்கைத் திருஅவையில் கூட்டொருங்கியக்கத் திருஅவைக்கான மாமன்றத்தினால் நடைமுறைப்படுத்தும் செயற்பாட்டை உங்கள் எல்லோருக்கும் அறிமுகப்படுத்தி ஊக்குவிக்க கிடைத்த சந்தர்ப்பத்திற்காக நன்றி கூறுகின்றோம். கிறிஸ்தவர்கள் மறைப் பணிக்காகத் திருமுழுக்கு பெற்றுள்ளார்கள். நாம் பெயரளவில் கிறிஸ்தவர்கள் அல்ல. "மறை பரப்புப் பணியிலே அனைத்துத் திருமுழுக்கு பெற்றோரும் உள்ளடக்கப்படுவர்" (கூட்டொருங்கியக்கத் திருஅவையின் இறுதி ஆவணம், சுருக்கமாக FD 66). "பன்முகப்படுத்தப்பட்ட சூழல்களில் வேரூன்றப்பட்ட தலத் திருஅவையில் இறைமக்கள் மீட்பின் நற்செய்தியை போதிப்பதோடு அதற்குச் சான்று பகர்கிறார்கள்" (FD 17). இறைமக்கள் என்ற ரீதியிலே தற்காலத்திலே "திருஅவைகளுக்கு தூய ஆவியார் கூறுவதை கேட்க" (திருவெளிபாடு 2:7) நாங்கள் எல்லோரும் அழைக்கப்படுகின்றோம். இந்த சுய ஆய்வானது "ஆண்டவரைக் கண்டதால் சீடர்கள் மகிழ்ச்சி கொண்டார்கள்" (யோவான் 20:20) என்ற அனுபவத்தையும் மகிழ்ச்சியையும் நோக்கி எங்களை -அழைத்துச் செல்கின்றது. பக் -2

## நூற்றாண்டுத் திருவிழாக் காணும் புனித பார்பரா ஆலயம்



இத்தாவில் புனித பார்பரா ஆலய நூற்றாண்டுத் திருவிழாத் ` திருப்பலி யாழ் ஆயர் பேரருட்கலாநிதி ஜஸ்டின் பேணாட் ஞானப்பிரகாசம் அவர்களின் தலைமையில் ஒப்புக்கொ டுக்கப்பட்டது. நூற்றாண்டுக்கான நினைவுத் தூபி திறந்து வைக்கப்பட்டு "ஒரு கிராமத்தின் நூற்றாண்டின் சாட்சி" என்ற நூலும் வெளியிடப்பட்டது. இந்நிகழ்வுகளை பங்குத்தந்தை அருட்பணி எஸ்.ஏ.ஜோர்ஜ் அடிகளார் அழகுற ஒழுங்கு செய்திருந்தார்

## ஆயருடனான சந்திப்பு



மெக்சிக்கோ நாட்டில் ஆரம்பிக்கப்பட்ட துறவற சபையான வார்த்தையின் ஊழியர் சபை அருட்சகோதரிகள் யாழ். மறைமாவட்ட ஆயர் பேரருட்தந்தை யஸ்ரின் ஞானப்பிரகாசம் அவர்களைச் சந்தித்துக் கலந்துரையாடியுள்ளனர்.

யாழ். மறைமாவட்ட ஆயர் இல்லத்தில் வைகாசி மாதம் 04ஆம் திகதி திங்கட்கிழமை நடைபெற்ற இச்சந்திப்பில் மட்டக்களப்பு மறைமாவட்டத்தில் பணியாற்றிவரும் அருட்சகோதரி மிர்னா போர்ரில்லா, ஜோசஃபா பெரெஸ், அமலமரித்தியாகிகள் சபை அருட்தந்தை அல்றின் ஆகியோர் கலந்துகொண்டனர்.

## பிறந்த தினத்தில் ஆயரை வாழ்த்துகின்றோம்



கீழ்த்திசை வானில்
கதிரவனின் பொன்னொளி
யாழ் திருஅவை வானில்
ஆயர் உம் அருளொளி
தாழ்விலா சேவையதால்
ஆன்மீகம் தழைக்க
வாழ்விக்கும் மன்னாவே
வாழ்த்துகின்றோம்
நன்நாளில் நலம்பெறவே
வல்லவர்கள் வேண்டாம்
நல்லவர்கள் வேண்டுமென
வல்ல சுடராக வனப்புடனே
வலம் வந்து மறைகாக்கும்
ஆன்ற பேரருள் ஆண்டகை
நீர் தாம் என்பதற்கு
ஆயத்துவ மேய்ப்பின்
அறுவடைகள் சான்றாகும்


வாழ்த்தி அருள் வேண்டுகின்றோம்
மரியன்னை வழி இறைவனிடம்
உங்களின் பிறந்த தினத்திலே!

## பணிக்குருத்துவ வாழ்வில் ஜுபிலி காணும் எம் குருக்கள்



அருட்பணி
**எஸ்.வி. பி. மங்களராஜா**

அருட்பணி வாழ்வில் பொற்பெருங் குருவாய்
பொன் விழாக் காணும் நற்பெருந் தந்தையே
இறையியல் புலமையும் மறைகாக்கும் மாண்பும்
நிறைகுடமென உம்மை நிறுத்திய வேளை இது
வரலாற்றுத் தடத்தில் வற்றாத நீரூற்றாய்
வண்புகழ் கொண்டு வாழ்வீர் எம்மை வாழ்விப்பீர்
பொன் ஒளிர்வில் நற்பணிகள் நலமே தொடர
இறையருள் வேண்டி இனிதே வாழ்த்துகின்றோம்
வாழ்க! வாழ்கவே!!




அருட்பணி
**எஸ்.எயின்சிலி றொஷான்**

ஆனையூரின் முதல் பெருங்குருவே!
ஆலவிருட்சமென விழுதெறியும் அரும்பணிகள்
உறக்கமற்ற உறைபணிகள்
முப்பொன் காணும் வளனார் அச்சகத்தின்
மூச்சுவிடா முகாமையாளர்
"பாதுகாவலன்" பத்திரிகையின் பாதுகாவலர்!
தவித்தோரின் உடனிருப்பு
கால்நூற்றாண்டு பணிக்குருத்துவத்தில்
கால்பதியாத பணிகளுமுண்டோ?
தொட்டதெல்லாம் பொன்னாகும் உமது அர்ப்பணங்கள்
தொடுவானமாய் தொடர்ந்திட
வெள்ளியின் குருமைந்தனுக்கு
அள்ளிச் சொரிகின்றோம்
இறையருள் கமழும் வாழ்த்து மலர்கள்



அருட்பணி
**எஸ்.றோய் பேர்டினட்**

உள்ளத்தால் பொய்யாது நின்று
உன்னதமான இறைப் பணியாற்றி
உருகும் மெழுகுவர்த்தியாய் உருக்குலையும் உலகிற்கு
ஆயனாய் நல்ல மேய்ப்பனாய்
பங்குகள் தோறும் கடின உழைப்பில்
கருத்தாய் நிலைநிற்கும்
கோதுமை மணியயும் நீரன்றே
நூறத்தனையாய் பலனீந்ததால்
தேவமாடத்தில் வெள்ளியாய் ஒளிர்கின்றீர்
புன்னகைதனை பொன்னகையாக்கி
இறை மக்களை இனிதுவக்கும் தந்தையே
பணிக்குருத்துவம் அணிசெய்திடவே
படைத்தவன் அருள்வேண்டி
பல்லாண்டு கூறுகின்றோம்



அருட்பணி
**எஸ்.ஏ.அருட்செல்வன்**

அருளின் செல்வனாய் குருத்துவ வெள்ளியில் ஒளிரும்
அருட்செல்வன் அடிகளார்!
கல்வியிலும் தமிழிலும் திறமும் கொண்டு
நவாலியூர் நாயகனானீர்
பத்திரிசியார் கல்லூரியின் பகுதித்தலைவராக
கல்விப் பணியில்தடம் பதித்தீர்
பங்குக் குருவாக பல களம் கண்டு
இரணைமாநகரின் நவயுக சிற்பியாய்
பலரின் வாழ்விலும் நம்பிக்கை ஒளி ஏற்றினீர்
வெள்ளி திசையில் பயணிக்கும்
உந்தன் பணிக் குருத்துவம்
உன்னத பயணமாக தொடர்ந்திட
உன்னதரின் வரம் வேண்டி
உளம் கனிந்து வாழ்த்துகின்றோம்



அருட்பணி
**ஏ.யோசப் ஜெயசீலன்**

யாழ் திருஅவையில் நற்குருவாய் நடைபயின்று
நற்பணியாற்றும் நற்குருவே!
திருச்சபைச் சட்டத்தின் வல்லுனராய்
ஆழ்புலம் கண்ட விரிவுரையாளரே!
எமில் இல்லத்தின் ஒட்டாத காப்பாளராய்
ஓய்வுநிலை ஆயரையும் குருக்களையும்
அரவணைத்துக்காக்கும் தாயன்புள்ளமே!
வெள்ளியின் குருவாய் சுடர் விடும் உமது
திருப்பணிகள் யாவும் இறையரசின் விழுமியங்கள்!
கடுகு விதை உவமைக்கு உவமானமாய்
உழைக்கும் உத்தம குருவே!
உந்தன் பணிவாழ்வு உதாரணமாக
உயர்மறையில் பயணிக்க
உள்ளத்தால் வாழ்த்துகிறோம்
இறையாசீர் உம்முடனே!

ஜூபிலி நாயகர்களுக்கு காவலன் வாசகநெஞ்சங்களின் வளம்நிறை நல்வாழ்த்துக்கள்

**ஆண்டவர் நகரைக் காக்கவில்லையெனில், காவலர்கள் விழித்திருப்பதும் வீணாகும். (தி.பா : 127:1)**

150 முப்பொன் விழா

# எமது எண்ணம்

## பலதரப்பு இராஜதந்திர செயற்பாட்டில் திருத்தந்தை 14 ஆம் லியோ

கத்தோலிக்க மேய்ப்புப்பணிகளுக்கு அப்பால், சர்வதேச அரசியல் விவகாரங்களில் தலையிடுவதில் திருத்தந்தை 14 ஆம் லியோ திருத்தந்தை இரண்டாம் ஜோன் பவுல் மற்றும் திருத்தந்தை 13 ஆம் லியோ ஆகியோருடன் நேரடியாக ஒப்பிட முடியும் என்ற வாதங்கள் தற்போது எழுந்துள்ளன.

வத்திக்கானின் ஆன்மீக அதிகாரத்தை உலகளாவிய புவிசார் அரசியலில் ஒரு பலமிக்க "மென் ஆற்றலாக" ஒப்பிடக்கூடிய அளவுக்குத் திருத்தந்தை 14ஆம் லியோவில் கால புவிசார் அரசியல் செயற்பாட்டு முறைமைகள் காணப்படுகின்றன.

13 ஆம் லியோவின் பாரம்பரியத்தைப் பின்பற்றியே, தற்போதைய திருத்தந்தை 14 ஆம் லியோ, தனது பெயரைத் தேர்வு செய்துள்ளார். 19 ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த 13 ஆம் லியோ, வத்திக்கான் தனது நிலப்பரப்பு அதிகாரங்களை இழந்த பின்னரும், சர்வதேசம் மற்றும் சமூகப் பிரச்சினைகளில் வலுவான தலையீடுகளை மேற்கொண்டிருந்தார்.

தற்போதைய திருத்தந்தை 14 ஆம் லியோவும், அதே போன்றதொரு நிறுவன ரீதியான, பலதரப்பு இராஜதந்திர அணுகுமுறையை (Institutional & Multilateral Diplomacy) உலக அரங்கில் கையாண்டு வருகிறார்.

தற்போதைய பலமுனை உலக சூழலில் (Multipolar World) எந்த ஒரு அதிகார மையத்தின் பக்கமும் சாராமல், "நெகிழ்வான மற்றும் நடுநிலையான மனிதாபிமான இராஜதந்திரத்தை" (Neutral and Moral Diplomacy) லியோ முன்னெடுத்து வருகிறார்.

குறிப்பாக அமெரிக்க - ஈரான் மற்றும் ரசிய - உக்ரைன் விவகாரங்களில் திருத்தந்தை 14 ஆம் லியோ எடுத்துள்ள நடவடிக்கைகள் இன்று சர்வதேச அரசியலில் பிரதான பேசு பொருளாக உள்ளன.

13 ஆம் லியோ தொழிலாளர் உரிமைகள் குறித்து "மூலதனம் மற்றும் உழைப்பின் உரிமைகளும் கடமைகளும்" (Rights and Duties of Capital and Labor) என்ற வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த கொள்கையை அன்று வெளியிட்டார்.

தற்போதைய திருத்தந்தை லியோ, 21 ஆம் நூற்றாண்டின் சவாலான செயற்கை நுண்ணறிவு (AI) மற்றும் சுற்றுச்சூழல் பாதுகாப்பு குறித்து உலக நாடுகளுக்கு வழிகாட்டி வருகிறார்.

செயற்கை நுண்ணறிவு அளவுக்கு அதிகமான முறையில், மாணவர்கள் மத்தியில் பயன்பாட்டுக்கு வருவதைத் தடைசெய்யக்கூடிய விதப்புரைகளை இந்த ஆண்டு திருத்தந்தை வழங்கியுள்ளார். UN மாநாடுகளிலும் திருத்தந்தையும் லியோ நேரடியாகப் பங்கேற்கின்றார்.

அதேநேரம், ஈரான் மீதான அமெரிக்க - இஸ்ரேல் தாக்குதல்களைம் தொடர்ச்சியாகக் கண்டித்து வரும், திருத்தந்தை, வன்முறைச் சுழற்சியை நிறுத்துமாறு இரு தரப்பையும் கேட்டுள்ளார். கடவுள் அமெரிக்காவின் பக்கம் இருப்பதாகக் கூறிய ட்ரம்ப்பின் வாதத்திற்குத் திருத்தந்தை சவால் விடுத்தார்.

"இடதுசாரி அரசியல்" செய்வதாகவும், ஈரானின் அணு ஆயுத முயற்சிக்கு ஆதரவளிப்பதாகவும் திருத்தந்தை மீது ட்ரம்ப் குற்றம் சாட்டினார். ஆனால் வரலாறு தெரியாமல் ட்ரம்ப் பேசுவதாகச் சுட்டிக்காட்டிய திருத்தந்தை, அமெரிக்க வத்திக்கான் உறவின் தாற்பரியத்தை ட்ரம்ப் விரைவில் உணர்ந்து கொள்வார் என்றும் குறிப்பிட்டார்.

சென்ற வாரம் வத்திக்கான் செய்திப் பிரிவு வெளியிட்ட அறிக்கை ஒன்றில், போரை எந்தத் தரப்பும் நீடிக்க முடியாது எனத் தெரிவிக்கப்பட்டிருந்தது. சமாதான பேச்சுக்கும் வற்புறுத்தப்பட்டிருந்தது.

உக்ரெய்னில் பாதிக்கப்பட்டுள்ள மக்கள் மற்றும் போர்க் கைதிகளின் நிலை குறித்து ஆழ்ந்த கவலை தெரிவித்துள்ளார். போர்க்கைதிகள் பரிமாற்றம் மற்றும் கடத்தப்பட்ட உக்ரெயன் குழந்தைகளை மீட்பது தொடர்பாக உக்ரெய்ன் ஜனாதிபதியுடன் பேச்சுவார்த்தை நடத்தினார்.

வத்திக்கான் சார்பில் ஒரு இரகசிய அமைதித் திட்டத்தை முன்னெடுத்து வருவதாகக் குறிப்பிட்டுள்ள திருத்தந்தை 14 ஆம் லியோ ரஷ்யா மற்றும் உக்ரெயன் ஆகிய இரு நாடுகளும் பேச்சுவார்த்தை மூலம் தீர்வுகாண வேண்டும் என வலியுறுத்தி வருகின்றார்.

"போர் என்பது எப்போதும் ஒரு தோல்வி" என்று கூறும் திருத்தந்தை, ஆயுத உற்பத்தி நிறுவனங்களே போரின் வெற்றியாளர்களாகத் திகழ்வதாகச் சாடியுள்ளார்.

காசா பிரதேசத்தில் போர் நிறுத்தம் செய்யவும், பிணைக் கைதிகளை விடுவிக்கவும் உலக நாடுகளைத் தொடர்ந்து வலியுறுத்தி வரும் திருத்தந்தை, பலஸ்தீன விவகாரத்துக்கு ஏற்கனவே ஐ.நாவில் ஒப்புக் கொண்ட தீர்வு முறைமையை செயற்படுத்த வேண்டும் என்று இஸ்ரேல் அரசிடம் வலியுறுத்தியுள்ளார்.

வத்திக்கானை மையமாக் கொண்ட செயற்குழு ஒன்றின் ஊடாகப் பரிந்துரைகள் முன்வைக்கப்படுகின்றன.

**அருட்பணி.எஸ்.எயின்சிலி றொஷான்**

# கூட்டொருங்கியக்க செயற்பாடுகள்.....

(1ம் பக்கத் தொடர்ச்சி)

இப்பணியை நிறைவேற்றுவதற்காக உலகெங்கும் உள்ள திருஅவையானது கூடொருங்கியக்கத் திருஅவைக்காக: ஒருங்கிணைப்பு,பங்கேற்பு, நற்செய்தி அறிவிப்பு என்ற தலைப்போடு கூட்டொருங்கியக்கத் திருஅவையின் வழிகளுக்குள் நுழைந்துள்ளது. இது "ஆண்டவரை பின்பற்றுவதிலும் அவருடைய பணிக்கு தங்களை அர்ப்பணிப்பதிலும் உண்மை உள்ளவர்களாக இருப்பதற்கான வழிகளைத் தேடுவதிலும் மகிழ்ச்சிக்கும் திருஅவையின் புதுப்பித்தலுக்குமான ஓர் அழைப்பு ஆகும்" (FD 3). கூட்டொருங்கியக்கம் என்பது திருஅவையின் நோக்கம் அல்ல, ஆனால் அது தூய ஆவியானவரின் வழிகாட்டுதலின் மூலம் கிறிஸ்துவினால் திரு-அவையி டம் ஒப்படைக்கப்பட்ட பணியின் சேவையாகும் (காண் FD 32). "பணி சார்ந்த நோக்குடையதான கூட்டொருங்கியக்க இயக்கமானது பணி சார்ந்ததாக திருஅவையின் எல்லா நிலைகளிலும் பரஸ்பர செவிமடுத்தலிலும், உரையாடலிலும், குழு ஆய்விலும் ஈடுபடுகின்றது. சுருக்கமாக சொன்னால் கூட்டொருங்கியக்க திருஅவை என்பது ஆன்மீகப் புதுப்பித்தலுக்கும், சீர்திருத்தத்திற்கும் பாதையாக அமைவதோடு அது திருஅவையை மென்மேலும் பங்குபற்றுதலோடு, நற்செய்தி அறிவிப்பு பணி சார்ந்தவற்றை ஊக்குவிப்பதால் அது கிறிஸ்துவின் ஒளியை பிரகாசித்துக் கொண்டு எல்லா மக்களோடும் பயணிக்கின்றது"

இக்கூட்டொருங்கியக்கத் திருஅவையின் பயணமானது 2021ஆம் ஆண்டு ஐப்பசி மாதம் திருத்தந்தை பிரான்சிஸ்சினால் பிரகடனம் செய்யப்பட்டு மூன்றாம் கட்ட நடைமுறையை அடைந்துள்ளது. "2025-2028 வரை மாமன்றத்தின் நடைமுறைப்படுத்தலுக்கான கட்டத்தின் வழி-முறைகள்" மாமன்றத்தின் பொதுச் செயலாளரினால் ஒப்புவிக்கப்பட்டுத் திருத்தந்தை 14ஆம் லியோவினால் அங்கீகரிக்கப் பட்டுள்ளது. இவ்வழிமுறைகளானது முழு திருஅவையும் ஒரே பொது வேலை திட்டத் திற்குள் முன்னோக்கி செல்லவும் அத்தோடு 2028ஆம் ஆண்டு ஐப்பசி மாதம் முதலாவது திருஅவை அமர்வு ஆயத்தத்துக்காகவும் தல திருஅவைகளுக்குள் கலந்துரையாடலை ஊக்குவிக்கவும் வழி கோலுகிறது. (cf.Pathiways பக். 5) இதன் நோக்கம் ஒவ்வொரு தல திருஅவைக் குள்ளும் அன்றாடம் கூட்டொருங்கியக்க இயக்கமாக செயற்படுகிற ஒரு கலாசாரத்தை (பங்குகளில், மறை மாவட்டங்களில்) ஊக்குவிப்பது ஆகும். இப்பகுதியின் நோக்கம், திருஅவையின் வாழ்க்கையை மேலும் "கூட்டொருங்கியக்க மாமன்ற (Synodal) தன்மையு டையதாக ஆக்குவதற்கான புதிய நடைமுறைகள் மற்றும் கட்டமைப்புகளை ஆய்வு செய்வதாகும் (Pathways, பக். 7) இது உரோமாபுரியிலிருந்து வரும் கட்டாய கோரிக்கையோ அல்லது செயல்பாடுகளின் தொடரோ அல்ல மாறாக, உள்ளூர் திருஅவைகள் தங்கள் சூழ்நிலைகளில் உண்மையான கூட்டொருங்கியக்க திருஅவையின் மாற்றத்தை ஏற்படுத்த உதவும் உருவாக்கப் பாதைகளை கண்டறிய வேண்டிய அழைப்பாகும் (அதே நூல்), எளிமையாகவும், உறுதியாகவும் சொல்வதானால், இது Lumen Gentium எனும் இரண்டாம் வத்திக்கான் சங்கத்தின் வெளியீட்டினால் முன்வைக்கப்பட்ட படிப்பினைகளை நடைமுறையில் கொண்டு வர வேண்டிய அழைப்பாகும். நடைமுறைப்படுத்தும் கட்டம் பின்வரும் பகுதிகளில் முன்னேற்றத்தை நோக்கமாகக் கொண்டுள்ளது (Pathways, பக் 20) குறிப்பாக, ஒவ்வொரு மறைமாவட்ட ஆயரின் தலைமையிலும், தீரமானத்திலும், அவரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ள இறைமக்களுடன் இணைந்து செயற்படுவதற்கான சுதந்திரம் வழங்கப்படுகிறது (cf.Pathways, பக். 9). இதற்காக, கீழ்க்கண்ட பகுதிகள் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளன

1. மறை மாவட்ட ஆயரின் தலைமையில் மறைமாவட்ட கூட்டொருங்கியக்க திருஅவைக் குழுக்களை அமைத்தல் (ef. Pathways, பக். 9-12),

இறுதி ஆவணத்தை முழுமையாக ஆய்வு செய்தல் குறிப்பாக, மறை மாவட்ட கூட்டொருங்கியக்கத் திருஅவைக் குழுக்கள் ஆயரின் வழிகாட்டுதலின் கீழ் முழு செயல் முறையையும் முன்னெடுக்க வேண்டும் (cf. Pathways, ub (7), C ஆவியில் உரையாடல் (Conversation in the Spirit) மூலம் கூட்டொருங்கியக்கத் திருஅவையின் ஆனமீகத்தை மேம்படுத்துதல் (உக. FD 43-46) இந்த உரையாடல் தாழ்மையுடன் செவிமடுத்தல், பேசும் சுதந்திரம் மற்றும் கலந்-துரையாடலுக்கான திறந்த மனம் போன்றவற்றைத் தருகின்றது. திருஅவையானது அனைத்து விடயங்களிலும் ஆண்டவருக்கும் அவருடைய மக்களுக்கும் சேவை செய்ய கூட்டொருங்கியக்க தன்மையுடன் நிலைத்திருக்க. இதுவே வழியா-கும்..

திருமுழுக்கு பெற்றவர்களாக (குருக்கள் மற்றும் பொதுமக்கள் இருவரும்) பொறுப்பு-களை அடையாளம் கண்டு நடைமுறைப்படுத்துதல் எமது மேய்ப்புப் பணியில் சிறிய கிறிஸ்தவ சமூகங்களுக்கு, குழுக்களுக்கு (Small Christian Communities) முன்னுரிமை வழங்குதல் (cf. FD 60, 75.77),

## விண்ணக வாழ்வின் ஆண்டுகள் 25

ஆண்டவர் தம் அன்பர்களின் சாவு அவரது பார்வையில் மிக மதிப்பிற்குரியது (தி.பா. 116:15)

மண்ணில் 25 . 09 . 1918



விண்ணில் 07 . 05 . 2001

**அமரர். ஜோண் டானியல் மத்தாயஸ்**

இறைநம்பிக்கையில் வாழ்ந்து இல்லறத்தை இன்பமாக்கி,
உழைப்பின் வியர்வையாலே எம் குடும்பத்தை உயர்த்திய தந்தையே!
பணியில் நேர்மையாய் நின்று,
பிள்ளைகளை அன்புடன் வளர்த்து,
கல்வி என்ற செல்வத்தை தந்து குடும்பத்தை கண்ணியமாக்கினீரே!
ஒரு மகனை ஆண்டவர்க்கு அர்ப்பணித்து
பணிக்குருத்துவ வாழ்வின் பலனும் கண்டீர்
இன்று அவர் விண்ணகத்தில் உம்மோடு சேர்ந்து
இறைமுகம் காண்கிறார் என்ற நம்பிக்கை எமக்குண்டு
இருபத்தைந்து ஆண்டு நினைவினிலும்
உமது நற்குணங்கள் அழியவில்லை
நன்றியுடன் உம்மை நினைக்கின்றோம்
ஆண்டவருடன் நித்தியத்தில் இளைப்பாறுங்கள்!

பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள, பூட்டப்பிள்ளைகள்

## விண்ணக வாழ்வின் 31ம் நாள் நினைவு

பிறப்பு 05 . 09 . 1950



இறப்பு 17 . 04 . 2026

அமரர்

**வின்சென்ற் இஸ்ராயேல் அன்ரன் டேவிட்**

நான் ஆண்டவரின் இல்லத்தில்
நெடு நாள் வாழ்ந்திருப்பேன்
(தி.பா. 23:6)

சீவியத்தில் உம்மை நேசித்தோம் எம்
மரணத்திலும் உம்மை மறவோம் இறைவனிடம் வேண்டுகின்றோம்
விண்ணக வீட்டில் இறைவனோடு மகிழ்ந்திருங்கள்

குடும்பத்தினர்

AD-136



# மண்ணகத்தின் மடியில் விண்ணகத்தின் வாக்குறுதி!

செ.ஞானசேகர்

மானுடத்தின் மாட்சியைப் போற்றும் உன்னதத் திருநாளான ஆண்டவருடைய விண்ணேற்றப் பெருவிழாவை இன்று மகிழ்வோடு கொண்டாடுகிறோம்.

விண்ணேற்றம் என்பது ஒரு மனிதரின் பிரிவோ அல்லது ஒரு காலத்தின் முடிவோ அல்ல. மாறாக, அது கடவுளுக்கும் மனிதகுலத்திற்கும் இடையிலான வெளியை உடைத்து, தெய்வீகம் மனித இதயங்களில் குடியேறிய ஒரு மகத்தான பரிமாற்ற மாகும்.

**“இதோ! உலக முடிவுவரை எந்நாளும் நான் உங்களுடன் இருக்கிறேன்’ (மத் 28:20)** என்ற இயேசுவின் அந்த இறுதித் திருவாக்கு, காலங்களைக் கடந்து நம் காதுகளில் இன்றும் ஒலித்துக்கொண்டே இருக்கிறது. இந்த வாக்குறுதிதான் இன்றுவரை திரு அவையை இயக்கும் உயிர்நாடியாகவும் துடித்துக் கொண்டிருக்கிறது. ”இயேசு விண்ணகத்திற்கு ஏறிச்சென்றபோது நம்மிடமிருந்து பிரிந்து விடவில்லை அதேபோல அவர் பூமிக்கு இறங்கி வந்தபோது விண்ணகத்தை விட்டுப் பிரிந்துவிட வில்லை” என்பார் புனித அகுஸ்தின். இந்த ஆழமான இறையியல் உண்மைதான் இன்றைய விழாவின் மையம். இயேசு விண்ணேற்றம் அடையும் முன்னர் ஒரு தந்தை தன் பிள்ளையிடம் பொறுப்புகளை ஒப்படைக்கும்போது காட்டும் அதே நம்பிக்கையை, அவர் தம் சீடர்களிடம் காட்டுகிறார். தமக்கெனத் தந்தை யாம் இறைவன் தந்த பணியை முழுமையாய் நிறைவேற்றி, அப்பணி உலகில் தொடர்ந்து நடைபெறத் தமது ஆவியைத் தருவதாகச் சீடர்களுக்கு வாக்களித்து, வானகம் திரும்புகிறார்.

இன்றைய முதல் வாசகத்தில், திருத்தூதர் பணிகளின் ஆசிரியர் புனித லூக்கா, இயேசுவின் உலகளாவிய பணிகளை மீண்டும் ஒருமுறை சிந்தித்துப் பார்க்க நம்மை அழைக்கிறார். இயேசு விண்ணேற்றம் அடைந்த நாள்வரை அவர் செய்தவை, கற்பித்தவை அனைத்தையும் நாம் கூர்ந்து நோக்கவேண்டும் (திப 1:2). இயேசு வெறும் வார்த்தைகளை உதிர்க்கும் பேச்சாளர் அல்லர் அவர் ஒரு செயல்வீரர். அவர் தம்மை முன்னிலைப் படுத்திக் கொள்ளாமல், இறைத் தந்தையின் ஆட்சி இவ்வுலகில் மலர உழைத்தார். அந்த ஆட்சி அன்பின் அடிப்படையில் அமையவேண்டுமே தவிர, வெறும் சட்டங்களிலோ அல்லது சடங்குமுறைகளிலோ சிறைப்பட்டிருக்கக் கூடாது என்பதில் உறுதியாய் இருந்தார். மானுட நலனைப் பேணுவதே உண்மையான ஆன்மீகம் என்பதை வாழ்ந்து காட்டிய அவர், அதற்கு முரணாக நின்ற அதிகார வர்க்கத்தை எதிர்த்தார். அதன் விளைவாக, அரசியலும் ஆன்மீகமும் கைகோர்த்து, அவரைச் சிலுவையில் அறைந்தன. ஆனால், சாவை வென்று உயிர்த்த ஆண்டவர், விண்ணேற்றம் அடையும்வரை தம் சீடர்களோடு தங்கி, அவர்களைத் தகுதியுள்ள சாட்சிகளாக உருவாக்கினார். இயேசு விண்ணேற்றம் அடையுமுன் சீடர்களுக்கு வழங்கும் இறுதிப் பணி, இன்றைய நற்செய்தியில் ஒரு கட்டளையாக ஒலிக்கிறது: “சீடராக்குங்கள் - திருமுழுக்குக் கொடுங்கள் - கற்பியுங்கள்,” இயேசு தரும் கட்டளைகள் ஒரு போர் வீரனுக்குத் தரப்படும் ஆணை போன்றது அல்ல. மாறாக, ஒரு தந்தை தன் பிள்ளையிடம் குடும்பப் பொறுப்புகளை ஒப்படைப்பது போன்றது.

முதலாவதாக, “மக்களினத்தாரைச் சீடராக்குதல்“ என்பது, தாம் உவமைகள் வழியாக உணர்த்திய உலகளாவிய மீட்பை எல்லைகளின்றி அனைவரும் பெற்றிடச் செய்து, பாரபட்சமற்ற ஒரே இறையாட்சிச் சமூகத்தை உருவாக்குவதைக் குறிக்கிறது. இரண்டாவதாக, “மூவொரு கடவுளின் பெயரால் திருமுழுக்குக் கொடுத்தல்“ என்பது, சடங்குகளைக் கடந்து தீமையிலிருந்து நன்மைக்கும், தன்னலத்திலிருந்து பிறர்நலத்திற்கும் கடந்துசெல்லும் ஒரு புதுவாழ்வின் அடையாளமாகவும், சமூக முன்னேற்றத்திற்காகத் தம்மை முழுவதுமாகக் கையளிக்கும் அர்ப்பணிப்பாகவும் அமைகிறது. மூன்றாவதாக, “கட்டளைகளைக் கற்பித்தல்“ என்பது, இயேசு சிலுவை வரை வாழ்ந்து காட்டிய அந்தத் தியாகமிக்க, தூய, மன்னிக்கும் அன்பின் புதிய கட்டளையை உலகிற்குப் போதிப்பதாகும். சுருக்கமாகக் கூறினால், அன்பினால் அனைவரையும் ஒருங்கிணைத்து, அருளடையாளத்தால் புனிதப்படுத்தி, கிறிஸ்துவின் வாழ்வுமுறையைப் பிறருக்குக் கற்றுக் கொடுப்பதே இவ்விழா நமக்குத் தரும் வாழ்நாள் பணியாகும்.



வாழ்நாள் பணியாகிய இறையாட்சியை அறிவிக்கும் இக்கடமையில், நாம் ஒரு போதும் தனித்து விடப்படுவதில்லை என்பதை உறுதிப்படுத்தும் விதமாக, தாம் உலகம் முடியும்வரை சீடரின் நற்செய்திப் பணிக்கு உறுதுணையாக இருப்பதாகவும் வாக்களிக்கிறார் இயேசு. அதாவது, நற்செய்திப் பணியைத் தொடங்கியவரும் அவரே. அதைத் தொடர்ந்து வழிநடத்துபவரும் அவரே என்ற மகிழ்ச்சியான சிந்தனை இந்த வாக்குறுதியில் வெளிப்படுகிறது.

இந்த வாக்குறுதி திடீரென வழங்கியதல்ல: மாறாக, அவரது பணி வாழ்வு முழுவதும் பல்வேறு சூழல்களில் இது வெளிப்பட்டதைக் காண்கிறோம். சீடர்கள் புயலில் சிக்கித் தவித்தபோது, “துணிவோடிருங்கள் நான்தான், அஞ்சாதீர்கள்” (மத் 14:27) என்று தேற்றியவர் அவரே. ”இரண்டு அல்லது மூன்று பேர் என் பெயரால் கூடும்போது அவர்கள் நடுவே இருப்பேன்” (18:20) என்று சமூக உறவுகளுக்குள் குடியேறியவரும் அவரே.இயேசு மறைநூலை விளக்கும்போதும் (லூக் 24:27), அப்பத்தைப் பிட்டுப் பகிரும்போதும் சீடர்கள் அவரது பிரசன்னத்தை உணரத் தொடங்கினர் (24:30-31). ”நான் உங்களைத் திக்கற்றவர்களாக விடமாட்டேன்” (யோவா14:1,18)“வேறொருதுணையாளரை உங்களுக்கு அருள்வேன்” (14:16) என்று தாம் முன்மொழிந்த அதே பாதுகாப்பை, இன்று விண்ணேற்றத்தின் வாயிலாக உறுதிப்படுத்துகிறார். ஆகவே, எல்லா மக்களையும் உள்ளடக்கிய ஓர் அன்பின் சமுதாயத்தைக் கட்டியெழுப்பும் நமது அன்றாடப் போராட்டங்களில் உயிர்த்த ஆண்டவர் நம் ஒவ்வொரு மூச்சிலும் செயலிலும் உடனிருந்து வழிநடத்துகிறார் என்பதை இத்திருநாள் நமக்கு மீண்டும் ஒருமுறை உறுதிப்படுத்துகிறது.

ஆண்டவரின் விண்ணேற்றப் பெருவிழா நமது அன்றாட வாழ்விற்கு வழங்கும் மூன்று முக்கிய வாழ்வியல் பாடங்களை நம் இதயத்தில் ஏந்துவோம். முதலாவதாக, நற்செய்தி அறிவிப்பு என்பது ஆயருக்கோ அல்லது துறவியருக்கோ மட்டுமே உரிய பணி அல்ல. அது ஒவ்வொரு கிறித்தவக் குடும்பத்திற்கும் விடுக்கப்பட்ட பொதுவான அழைப்பு என்பதை உணர்வோம். அன்று இயேசுவிடமிருந்து இந்தக் கட்டளையைப் பெற்றவர்கள் சாதாரண குடும்பத் தலைவர்களும் தொழிலாளிகளுமே. எனவே, இந்தப் பணி நமது இல்லங்களில் ஒரு வாழ்வியல் முறையாக மலரவேண்டும். குறிப்பாக, தம்பதியர் ஒருவருக்கொருவர் மன்னித்து ஏற்றுக் கொண்டு ஒப்புரவாகும்போது, அங்கே நற்செய்தி உயிர் பெறுகிறது. பெற்றோர் நற்செய்தியை அடுத்த தலைமுறைக்குக் கடத்தும் மறைப்பணியாளர்களாக மாறவேண்டும். மேலும், நமது இல்லங்களின் கதவுகள் விருந்தோம்பலுக்காகவும், ஏழைகளின் நலனுக்காகவும் திறந்திருக்கும்போது, நமது குடும்பம் ஒரு “நடமாடும் நற்செய்தியாக” மாறுகிறது. இவ்வாறு, அன்றாட உறவுகளில் வெளிப்படும் சுயநலமற்ற அன்பே சமூகத்திற்கு நாம் வழங்கும் மிகப் பெரிய நற்செய்தி அறிவிப்பாகும். இரண்டாவதாக, நற்செய்திப் பயணத்தில் சவால்களும் தடைகளும் இயல்பானவை என்பதை உணர்வோம். இயேசுவின் பணிவாழ்வு எப்படித் துன்பங்களால் நிறைந்திருந்ததோ, அதுபோலவே நமது நற்செய்திப் பயணமும் துயரங்கள் நிறைந்ததாக இருக்கலாம். ஆனால், “நாம் ஒருபோதும் தனிமையில் இல்லை” என்ற ஆழமான நம்பிக்கை அந்தத் தடைகளைத் தகர்க்கும்.

இயேசுவின் உடனிருப்பு ஒரு நிழலைப் போன்றது. அது வெளிச்சத்தில் நமக்குத் தெரியாமல் இருக்கலாம் ஆனால், அது எப்போதும் நம்மைத் தொடரும். ”மகனே, மகளே... கலங்காதே, உன் கரங்களைப் பிடித்திருப்பது நான்தான்” என்று விண்ணேற்றம் கண்ட ஆண்டவர் நமக்கு வாக்குறுதி அளிக்கிறார். நாம் சோர்ந்து போகும் போதெல்லாம் அந்த “உடனிருப்பின் வாக்குறுதி“ நம்மை மீண்டும் எழுந்து நடக்கச்செய்யும் உந்து சக்தியாக மாறும். மூன்றாவதாக, நமது இறுதி இலக்கு விண்ணகம் என்பதை உணர்ந்து, மண்ணக வாழ்வைத் தூய்மையாக வாழ்வோம். நாம் பூமியில் வாழ்ந்தாலும், நமது உண்மையான குடியுரிமை விண்ணகத்தில் இருக்கிறது விண்ணேற்றம் அடைந்த இயேசு இப்போது எங்கும் நிறைந்திருக்கிறார் அவர் நோயுற்றவரின் படுக்கையருகிலும், ஏழையின் கண்ணீரிலும், நம்பிக்கையற்றவரின் இதயத்திலும் குடிகொண்டிருக்கிறார்: மண்ணகத்தின் மடியில் நின்றுகொண்டு விண்ணகத்தைப் பார்த்த சீடர்களுக்கு, மண்ணகத்தையே விண்ணகமாக மாற்றும் இரகசியத்தை இயேசு கற்றுக் கொடுத்தார். பசியோடும் நோயோடும் அகதிகளாகவும் வாடும் மாந்தருக்கு நாம் செய்யும் சிறு உதவியும் இயேசுவுக்கே செய்யப்படுகிறது. இந்த உணர்வு நம்மை வெறும் சொற்களின் மனிதராக அல்லாமல், செயல்களின் மனிதராக மாற்றுகிறது.

நிறைவாக, விண்ணேற்றம் என்பது இயேசு நம்மை விட்டுத் தூரமாகச் சென்ற நிகழ்வு அல்ல. மாறாக, அவர் நம் ஒவ்வொருவருடைய வாழ்விலும் ஆழமாகக் குடியேறிய உன்னத நிகழ்வு. அவர் எங்கோ எட்டாத வானத்தில் இல்லை. மாறாக, துயருறுவோரின் கண்ணீரைத் துடைக்கும் கரங்களிலும், பசித்திருப்போர் அருந்தும் உணவிலும், தனிமையில் வாடுவோருக்கு ஆறுதல் தரும் அன்புக் குரலிலும் உயிர்ப்போடு இருக்கிறார். “எல்லா நேரங்களிலும் நற்செய்தியை அறிவிக்க முயற்சியுங்கள் தேவைப்பட்டால் மட்டும் வார்த்தைகளைப் பயன்படுத்துங்கள்” என்ற புனித பிரான்சிஸ் அசிசியாரின் கூற்றிற்கேற்ப, நாம் நற்செய்தியின் கருவிகளாக மாறுவோம். மண்ணகத்தின் மடியில் நின்று கொண்டு, விண்ணகத்தின் வாக்குறுதியைச் சுமந்தபடி, துணி வோடும் நம்பிக்கையோடும் புறப்படுவோம். உயிர்த்த ஆண்டவர் உலகம் முடியும் வரை எந்நாளும் நம் மோடு இருக்கிறார்.

## நமது வாழ்வில் செமாலை

நாம் செபமாலை செபிக்கும்போது இயேசுவின் மறையுண்மைகளை ஆழ்ந்து தியானிக்கிறோம் இவ்வாறு செபமாலை நம்மை இயேசுவின் வாழ்வோடு இணைய வைக்கிறது. செபமாலையின் தொடக்கத்தில் நம்பிக்கை அறிக்கை செபத்தைச் சொல்லுகிறோம். நமது நம்பிக்கையை புதுப்பித்துக் கொள்வதற்கு இது உதவியாக அமைகின்றது. இயேசு கற்றுத்தந்த செபம், செபங்களில் எல்லாம் மிக மேலான செபம். இறைத்திருவுளத்தை உணர்ந்து அதன்வழியில் நடக்க பயிற்றுவிக்கப்படுகிறோம்.

அன்னையை நோக்கி செபிக்கின்ற செபம், ”அருள்மிகப் பெற்றவரே நமக்கு அன்னையின் அருள்வாழ்வை நமது மனதில் படம் பிடித்துக் காட்டுகின்றது. இச்செபத்தில் மூவொரு கடவுளுக்கு நாம் தரும் இறைப்புகழ் இறுதியில் அமைந்துள்ளது. செபமாலை செபிப்பது மிகச் சிறந்த பக்தி முயற்சிகளில் ஒன்று. நற்செய்தியை முழுமையாகக் கொண்ட செபம். மரியாவுடன் அமர்ந்து இயேசுவின் வாழ்வைத் தியானிக்கும் செபம். ஆழ்மனத்தின் அமைதியை மீட்டெடுக்கும் செபம். செபிப்போம். மனநிறைவு பெறுவோம்.

# இலங்கை ஆயர் மன்றத்தின் மௌனத்திற்கு ஒரு தொடக்க புள்ளி

பல உயிர்கள் அநியாயமாகக் காவு கொள்ளப்படுவதை உடனடியாக நிறுத்தும்படி வெளிப்படையாகத் திருத்தந்தை கூறியது பல நாடுகளது செயல்களைக் கேள்விக் குறியாக்கியுள்ளது. அவர்களது மனச்சாட்சியைத் தட்டியெழுப்பியுள்ளது. இம் முரண்பாட்டில் திருத்தந்தையின் உரைகள் பல ஆயர் மன்றங்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்தியுள்ளது. இலங்கையிலும் இடம்பெற்ற இனமுரண்பாட்டில் பல உயிர்கள் அநியாயமாக மடிந்துள்ளதும், இலங்கை ஆயர் மன்றத்தின் மௌனம் சற்றுக் குலையுமென்று எதிர்பார்க்கப்படுகிறது.

ஐக்கிய அமெரிக்க நாட்டவராகிய திருத்தந்தை அவர்கள் தனது நாட்டைப்பற்றி உரிமையோடும், துணிவோடும் பேசுவதற்கு இந்த வேளையில் இறைவன் கொடுத்த பெரும் பேறாகக் இதைக் கருதலாம்.

புனித 2ம் யோவான் பவுல் அவர்களிற்கும் திருத்தந்தை 14ம் லியோவிற்கும் சில உடன்பாடுகள் உண்டென்பது அவதானிக்கக்கூடியது. சோவியத் ஒன்றிப்பின் (யூனியன்) ஒரு கொலனியாகிய போலந்தில் உதித்த 2ம் யோண்பவுல் சோவியத் ஒன்றிப்பின் ஆட்சியில் நடந்த கொடூரங்கள் மக்கள் வறுமைக்கோட்டில் தள்ளப்பட்டது. மக்களின் அவலங்களை அனுபவித்தவர். அத்துடன் நாசி ஆக்கிரமிப்பையும் பட்டறிந்தவர். இதனால் அதன் ஆட்சியில் கிழக்கு நாடுகள் விடுவிக்கப்பட்ட ஆசித்தார். அதுமட்டுமன்றி அன்றைய சோவியத் தலைவர் கோபாட்சாவும், திருத்தந்தையும் சிலாவிய இனக்குடும்பத்தைச் சேர்ந்ததும், திருத்தந்தையின் குரலைக் கேட்க நிர்ப்பந்திக்கப்பட்டார். இவருடைய தாக்கத்தினால் சோவியத் ஒன்றிப்பின் கீழிருந்த நாடுகள் விடுவிக்கப்பட்டது வரலாற்று உண்மை. அதேபாணியில் அமெரிக்கா நாட்டைச் சார்ந்த முதல் திருத்தந்தை லியோ அவர்களின் கருத்துக்களைக் கேட்க உரிமையோடு பேச அமெரிக்க வல்லரசு கேட்க வேண்டிய நிலைமைக்குக் தள்ளப்பட்டுள்ளது.

உலக அரங்கில் இக்கட்டான சூழலில் இறைவனின் கருவிகளாக இரு திருத்தந்தையர்கள் செயற்பட்டது ஒரு வியத்தகு நிகழ்வு.

ஈரான் - இஸ்ரவேல் - அமெரிக்க முரண்பாட்டில் விளைந்த போருக்கு திருத்தந்தையின் காலமறிந்த திருவுரைகள் பெரும் தாக்கத்தை விளைவித்துள்ளது.

அமெரிக்கத் தலைவர் டொனாட்ரம் அவர்களின் சொல்லாடல்கள் பல எதிர் அலைகளை உருவாக்கியுள்ளது. இயேசுபிரான் பலருக்கு உணவு கொடுத்தது போல எமது அரசும் கொடுப்பதான கூற்று அமெரிக்க மக்களின் உண்வுகளைக் காணப்படுத்தியுள்ளது என முன்னைய அமெரிக்க முதல்வர் பில்கிளின்ரன் விமர்சித்துள்ளார். மேலும் துணை முதல்வர் பெடி வலன்சா புதிதாகக் கத்தோலிக்கத்தை தழுவிக் கொண்டவர். ஒரு கட்டத்தில் திருத்தந்தை அறநெறி சார்ந்த நெறிமுறைகளை மட்டும் பேசவேண்டுமென்றதற்கு அமெரிக்கக் கத்தோலிக்க ஆயர்களும் அறநெறிசார்ந்த விடயங்களில் திருத்தந்தை கட்டாயமாகத் தலையிட வேண்டும். எது சரி எது பிழை என்று சுட்டுதல் அவர்களது கடமை என்ற ஆயரின் மடலில் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

**அருட்பணி அமிர்த யெயசேகரம்**

திருத்தந்தை லியோ அவர்கள் வெகு சில கொடுங்கோலர் கையில் உலகம் சிக்கியுள்ளது. வறிய நாடுகளை அவர்களை சூறையாடுகிறார்கள் என மிகவும் கனமான சொற்பதங்களைப் பயன்படுத்தியுள்ளார்கள். அதை இவ்வாறு மொழிய முடியும். உலகின் மனச்சாட்சிகளின் குரலாக, குரல் அற்றவர்களின் குரலாக விளங்குகிறார். சமயத்தின் தூய்மையை புனித நெறிமுறைகளை, மற்றவர்களைக் கொல்லும் ஆயுதமாகப் பயன்படுத்தக்கூடாது. இது நீதிக்கான போர் அல்ல என்ற திட்டவட்டமாக பலரால் பரிந்துரைக்கப்பட்டுள்ளது.

### பலியீனப்பட்ட ஓர் சில ஆபிரிக்க நாடுகளின் தரிசிப்பு

அல்ஜீரியா உட்பட கமறூண் அங்கோலா, ஈக்குவாட்டோர் கியானா, ஆபிரிக்கா மிகவும் வறுமையான கண்டம் என வர்ணிக்கப்படுகிறது. உள்நாட்டுப் போர்களினால் சிக்குப்பட்டுள்ள கொங்கே, தென்சூடானைத் திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் முன்னர் சந்தித்துள்ளார். பல வெளி நாட்டு முதலீட்டாளர்கள் தமது நிதிப்பெருக்கத்திற்கு இவ்நாடுகளைப் பயன்படுத்தி பெரும் பாதிப்பிற்குத் தள்ளியுள்ளார்கள்.

மேலும் திருத்தந்தை அவர்கள் இவ் மூன்று நாடுகளில் தலைவர்களையும், அரசுகளையும் சாடியுள்ளார். இத்தலைவர்களின் அதிகாரப் போக்கையும் ஊழல்களையும் தலைவர்களுக்கு உணர்த்தி மக்களுக்கு தமது நிலைமையை உணர்த்தியுள்ளார்.

திருத்தந்தை அவர்கள் வருகை தந்த இந்த நான்கு நாடுகள் கொலனித்துவ ஆட்சியில் பல காலங்கள் இருந்தன. அல்ஜீரியாவில் பிரெஞ்சு கமறூண் ஆங்கிலம் அங்கோலா போத்துக்கல் ஈகுவாடோர் கிலானாவில் ஸ்பானிய மொழி பிரேசேலில் மொசம்பிக்க நாடுகளிலும் பேசப்படுகிறது அவதானிக்கக்கூடியது. ஈகுவடோர் கியானவில் ஸ்பானியன் மொழி பேசப்படுகிறது. திருத்தந்தை இந் நான்கு மொழிகளிலும் பரீட்சயமானவர் அல்ஜீரியா இஸ்லாமிய நாடு, கிறிஸ்தவர்கள் மிகச் சொற்பமான நாடு 1990 நடந்த உள்நாட்டுப் புரட்சியில் கத்தோலிக்கர் கொல்லப்பட்டனர். 1994 இல் குருக்கள் அகுஸ்தீன் சபையைச்சேர்ந்த இருவரும் கொல்லப்பட்டார்கள். மற்ற நாடுகளில் உள்ளது போல் இங்கு கத்தோலிக்கப் பள்ளிகள், மருத்துவமனைகள் இல்லை. அவர்களின் சாட்சிய வாழ்வு கவனிக்கப்பாலது. கமறூன் வளமான நாடாக இருந்தும் குழுக்களின் அரச உழைப்பினாலும், தலைவரின் அதிகாரப் போக்கினாலும் நாட்டின் வளங்கள் நீதியான முறையில் பகிரப்படாமல் மக்கள் வறுமைக்கோட்டில் வாழ்கிறார்கள். திருத்தந்தை இந்நிலையை மக்களுக்கு எடுத்தியம்பி விழிப்புணர்வை ஏற்படுத்தியுள்ளார்.

அங்கோலா : எண்ணை வளம், இயற்கை வளமிருந்தும் அரசின் அதிகாரப் போக்கும், நிர்வாகச் சீர்கேட்டினால் மக்களின் உரிமைக்குரிய சொத்துக்கள், மூலதனங்கள் பகிரப்படாமல் வாழ்வதை திருத்தந்தை வெகுவாகக் கண்டித்துள்ளார். இறுதியாக ஈகுவடோர் கியானா : இந் நாடும் முன்னர் கூறப்பட்ட நாடுகள் போலல்லாமல் இருந்தும் திருத்தந்தை அரச இயந்திரத்தை வெளிப்படைத் தன்மையின் முக்கியத்துவத்தை உணர்த்தியுள்ளார்.

# இளமை ஒரு சவால்

## வாய்ப்பா? சவாலா?



இன்றைய இளமை ஓர் அருமையான வாய்ப்பா? சவால்கள் நிறைந்த ஒரு வாழ்க்கைப் போராட்டமா? இந்தக் கேள்விகளுக்கான விடை - அதை நாம் யாரிடம் கேட்கிறோம்? என்பதைப் பொறுத்தது.

பழைய தலைமுறை, “அந்தக் காலத்தில் எங்களுக்கெல்லாம் என்ன வாய்ப்பு வசதி இருந்தது? பாடசாலையா? போக்குவரத்தா? மின்சாரமா? தொலைக்காட்சியா? கைபேசியா? எங்களுக்கெல்லாம் கிடைக்காத எத்தனையோ வசதி வாய்ப்புகள் இன்று கிடைக்கின்றன. இன்றைய இளையோருக்கு என்ன? அந்த வாய்ப்புகளைப் பயன்படுத்தினால் அவர்கள் எவ்வளவோ சாதிக்கலாம்?“ என்று அலுத்துக்கொள்ளும்.

இதில் உண்மை இல்லாமல் இல்லை அவர்களது எதிர்பார்ப்புகளும் நியாயமானவைதான். இன்றைய இளைய தலை முறையினரும்கூட இன்றைய நல்வாய்ப்புகளை உணர்ந்துதான் இருக்கிறார்கள். அவர்கள் மகிழ்ச்சியாகவும் தன்னம்பிக்கை யோடும் வளர்கிறார்கள். புதுப்புது உடையலங்காரம், சொகுசான வாகனங்கள், கைபேசிகள். அவற்றில் இடைவிடாமல் தொடரும் கலகலப்பான உரையாடல்கள், நாலுபேர் கூடுமிடத்தில் நடக்கும் ஆட்டம்பாட்டம், கொண்டாட்டம், விருந்து, வாணவேடிக்கை...! இன்றைய இளைய தலைமுறையினரின் குதூகலத்திற்குக் கொஞ்சமும் தடை இருப்பதாகத் தெரியவில்லை. அவர்கள் தங்களுக்குக் கிடைத்திருக்கும் வாய்ப்புகளை நன்றாகத் தெரிந்து வைத்திருக்கிறார்கள். அவற்றை முழுமையாகப் பயன்படுத்திக் கொள்ளவும் செய்கிறார்கள். ஆனால், இந்த வாய்ப்புகளைத் தாண்டி அவர்கள் சந்திக்கப் போகிற சவால்கள் அவர்களுடைய கவனத்தைத் தேவையான அளவு ஈர்த்திருக்கிறதா? அவற்றை எப்படி நாம் எதிர்கொள்ளப்போகிறோம்? அந்தச் சவால்களைச் சந்திக்க இன்று நாம் என்ன செய்யவேண்டும்? நம்மை நாமே எப்படித் தயாரித்துக் கொள்ள வேண்டும்?

இன்றைய வாய்ப்புகளை நாம் சரியாகப் பயன்படுத்திக் கொள்ளத் தவறினால், நம் வருங்காலம் என்ன ஆகும்? முழுச் சந்தைமயமாகிவிட்ட உலகம் எப்படி நம்மை ஓரங்கட்டிவிட்டுப் போகும்?

பலர் தேய. சிலர் மட்டும் வாய்ப்புகளைச் சரியாகப் பயன்படுத்திக்கொண்டு முன்னேறும் உலகம் இது. இன்றைய போட்டிச்சூழலில் தள்ளாடும் பலரை நாம்



தினமும் பார்க்கிறோம். வருங்காலத்தில் நாமும் இவர்களைப் போல் பரிதவிக்கப் போகிறோமா? இல்லை... இல்லை... இன்றே நம் வருங்காலச் சவால்களைச் சந்திப்பதைப் பற்றிச் சிந்திக்கப் போகிறோமா?

இன்றைய இளமை சந்திக்கும் சில சவால்களைப் பட்டியலிட்டுக்கொள்வோமா? எல்லாவற்றையும் அவசரகதியில் அனுபவித்து விடவேண்டும் என்று முட்டிமோதிக் கொள்கிறோமா? நிதானம் காட்டுகிறோமா?

பெற்றோரின் துணையைச் சரியாகப் பயன்படுத்திக்கொண்டு நம் காலில் நிற்கப் பழகுகிறோமா? பெற்றோருக்குச் செல்லமான சுமையாக மாறிப்போகிறோமா?

பணம், வெற்றி என்ற நோக்கங்களை மட்டும் குறிவைத்து ஓடும் பந்தயக் குதிரைகளாக வளர்கிறோமா? மனித உறவுகளை மதிக்கும் வாழ்க்கைப் போட்டிக்கு நம்மைத் தயாரித்துக் கொள்கிறோமா?

நம் பருவப் பயணத்தில் எல்லைகளையும் கட்டுப்பாடுகளையும் மதிக்கப் பழகுகிறோமா? வெம்பிப் பழுத்து வீணாகும் கூட்டத்தில் கலந்து கரைந்து போகிறோமா?

கிடைக்கின்ற வேலைகளையும் வாய்ப்புகளையும் கெட்டியாகப் பிடித்துக் கொண்டு, படிப்படியாக முன்னேற முயல்கிறோமா? அது சரியில்லை, இது சரியில்லை என்று புலம்பியே காலந்தள்ளப் போகிறோமா?

பணம், பதவி, உல்லாசம், உயரம் என்று ஓயாமல் உச்சாணிக் கொம்பை எட்டிப்பிடிக்க முயன்று வாழ்வைத் தொலைக்கப் போகிறோமா? உறவையும் வாழ்வையும் மதிக்கவும் நேசிக்கவும் கற்றுக்கொள்ளப் போகிறோமா?

நம்முடைய வருங்கால வாழ்க்கைப் பயணம் தொடர்ந்து மற்றவர்களுக்குச் சுமையாக இருக்கப் போகிறதா? சுமைதாங்கியாக இருக்கப் போகிறதா? நாளைய இலக்கை நோக்கி இன்றே நம் வாழ்க்கைப் பாதையைச் சீரமைக்க நம்மால் முடியும். நம்மால் மட்டும்தான் முடியும்! நாம் மாறப்போகிறோமா? பிடிவாதமாகச் சரிவுப் பாதையில் பயணிக்கப் போகிறோமா?

இந்த நம்முடைய இளமைச் சவால்களைப் பற்றி நாம் கொஞ்சம் சிந்திப்போம். தொடர்ந்து சிந்திப்போம்: வாழ்க்கை ஒவ்வொரு நாளும் புத்தம் புதிய சவால்களையும் கொண்டுவரும், வாய்ப்புகளையும் கொண்டுவரும். என் சவால்களைச் சந்திப்பேன் வாய்ப்புகளைப் பயன்படுத்திக்கொண்டு முன்னேறுவேன்.

**அருள்முனைவர் மி.நோயல்**

அன்பின் மகிழ்வு

# திருஆவையின் சட்டநூல் 1055 -2:

# திருமணத்தின் புனித நோக்கங்களில் ஒன்றான தம்பதிகளின் நலன் (Good of the Spouses)

அருட்பணி மனுவற்பிள்ளை டேவிட்
அகவொளி குடும்ப நல மையம்

திருச்சபையின் சட்டநூல் 1055 திருமணத்தின் புனித இயல்பையும் அதன் முக்கிய நோக்கங்களையும் தெளிவாக வெளிப்படுத்துகிறது. திருமணம் என்பது ஓர் ஆணும் ஓர் பெண்ணும் தங்களுக்குள் "முழு வாழ்வின் கூட்டுறவை" ஏற்படுத்திக் கொள்ளும் உடன்படிக்கையாகும். இவ்வுடன்படிக்கை, அதன் இயல்பிலேயே, தம்பதிகளின் நலனுக்கும், பிள்ளைப் பேற்றுக்கும், பிள்ளைகளின் கல்விக்குமாக ஏற்படுத்தப்பட்டுள்ளது என்று திருஅவை போதிக்கிறது. இக்கட்டுரையில், திருமணத்தின் நோக்கங்களின் ஒன்றான "தம்பதிகளின் நலன்" என்ற ஆழமான உண்மையை இந்தக்கட்டுரையில் சிந்திப் போம். மற்றைய நோக்கமாகிப் பிள்ளைப் பேறு, பிள்ளைகளின் கல்வி, உயிரை வரவேற்கும் கிறிஸ்தவப் பொறுப்பு ஆகிய வற்றை அடுத்த கட்டுரையில் சிந்திப்போம். கிறிஸ்தவ திருமணத்தின் முதல் நோக்க மாகிய கணவன் மனைவி ஒருவொருவருக் கொருவர் துணையாக இருப்பது என்றால் என்ன? இது வெறும் உடல், பொருளாதார, உணர்ச்சி போன்றவற்றில் ஆதரவாக இருப்பதில் மட்டும் குறித்து நிற்கவில்லை. அது தம்பதிகள் ஒருவரை ஒருவர் கடவுளின் அருளில் வளரச் செய்யும் புனிதப் பொறுப்பாகும். இன்றைய உலகில் திருமணம் சில நேரங்களில் காதலின் சமூக அங்கீகாரமாகவும், சில நேரங்களில் சில திருமணங்கள் வெறும் தனிப்பட்ட ஒப்பந்தமாகவும், சில நேரங்களில் வசதிக்கேற்ப மாறும் உறவாகவும் பார்க்கப்படுகிறது. ஆனால் கிறிஸ்தவ நம்பிக்கையின் ஒளியில் திருமணம் இவற்றை விட உயர்ந்தது. அது இறைவன் நிறுவிய புனித உடன்படிக்கை. "மனிதன் தனியே இருப்பது நல்லதன்று" (தொநூ 2:18) என்ற இறைவார்த்தை, மனிதன் தனிமைக்காக அல்ல, அன்பிற்கும் உறவிற்காகவும் அர்ப்பணிப்புக்காகவும் படைக்கப்பட்டவன் என்பதை நினைவூட்டுகிறது.

திருமணத்தின் இரண்டு நோக்கங்களான, தம்பதி களின் நலன் மற்றும் பிள்ளைப்பேறு, என்பன ஒன்றுக் கொன்று எதிரானவை அல்ல மாறாக ஒன்று அன்பின் உள் ஆழத்தை வெளிப்படுத்தும் அதேவேளையில் மற்றொன்று அன்பின் கனியாகிய பிள்ளைப்பேற்றை வெளிப்படுத்து கின்றது. ஒன்று தம்பதியரை புனிதப்படுத்துகிறது. மற்றொன்று அந்த அன்பை உயிருக்கும் வருங்காலத் சந்ததிக்கும் திறக்கின்றது. தம்பதிகளின் நலன் என்பது உடல் நலன் அல்லது பொருளாதாரப் பாதுகாப்பு மட்டும் அல்ல. அது மன அமைதி, உணர்ச்சி பாதுகாப்பு, ஒழுக்க வளர்ச்சி, ஆன்மிக முன்னேற்றம், பரஸ்பர மரியாதை, சுமை பகிர்வு, துன்ப நேரங்களில் துணைநிற்றல் ஆகியவற்றை உள்ளடக்கிய முழுமையான மனித நலம். கிறிஸ்தவ இல்லற வாழ்வில் கணவன் மனைவி வெறும் உடன் வாழ்பவர்கள் அல்லர் மாறாக அவர்கள் ஒருவருக்கொருவர் இறைவன் அளித்த பரிசும் பொறுப்பும் ஆவர்.

திருமண அன்பு வெறும் உரிமை கோரும் அன்பாக மட்டும் இருக்க முடியாது. அது ஒருவர் தன்னையே மற்றவருக்கு அளிக்கும் அன்பாக இருக்க வேண்டும். "நீ எனக்காக என்ன செய்கிறாய்?" என்று கேட்கும் அன்பல்ல அது "உன் நலனுக்காக நான் எதையும் செய்ய ஆயத்தமாக தயாராக இருக்கிறேன்?" என்று தன்னை மற்றவருக்கு அர்ப்பணிக்கும் அன்பாகும். இதையே புனித பவுல், "கிறிஸ்து திருச்சபையை அன்புகூர்ந்து அதற்காகத் தம்மையே ஒப்புக்கொடுத்தது போல், கணவர்களே, நீங்கள் உங்கள் மனைவியரை அன்புகூருங்கள்" (எபே 5:25) என்று போதிக்கிறார். திருமண அன்பு சுகத்தில் மட்டும் நிலைக்கும் அன்பல்ல மாறாக ஒருவர் மற்றவருக்காகத் துன்பங்ளையும் சிலுவைகளையும் தாங்கும் அன்பு.

புனித யோண் கிறிஸ்தோஸ்தம் கிறிஸ்தவ திருமணத் தைப்பற்றிப் பேசும்போது ஒருவர் தன் மனைவியை அன்பால் மட்டுமே வெல்ல முடியும் என்று கணவர்களுக்கு அறிவுறுத்தினார். இல்லம் பெரிய செல்வத்தால் அமைதியாகாது மாறாக தம்பதிகள் தங்களுக்குள் பகிரும் மரியாதையான அன்பான வார்த்தைகளால் மட்டுமே அது அமைதியாகும். ஒரு முதிய தம்பதியரிடம், "உங்கள் இல்லற வாழ்க்கையின் வெற்றி யின் இரகசியம் என்ன" என்று ஒருவர் கேட்டபோது, கணவர் அழகாகச் சொன்னார்: "நாங்கள் எம் குடும்ப வாழ்வில் சண்டையிடவில்லை என்பதல்ல. ஆனால் சண்டைக்குப் பிறகு யார் முதலில் பேசுவார் என்று காத்திருக்காமல், யார் முதலில் குணப்படுத்துவார் என்று நினைக்கக் கற்றுக் கொண்டோம்." இதுவே இல்லற வாழ்வின் வெற்றிக்கான இறைஞானம் ஆகும். குடும்ப வாழ்வில் கருத்து வேறுபாடு இல்லாமல் வாழ்வதே வெற்றி அல்ல மாறாக ஒருவரை ஒருவர் காயப்படுத்திய பின்னும் நாளாந்தம் அன்பைத் தேர்ந்தெடுப்பதே



குடும்ப வாழ்வாகும்.

திருத்தந்தை பிரான்சிஸ் குடும்ப வாழ்வில் "தயவு செய்து", "நன்றி", "மன்னிக்கவும்" என்ற மூன்று சொற்கள் நாளாந்தம் பயன்படுத்தப்படுவது அவசியம் என்று போதிக்கிறார். இவை சாதாரண மரியாதைச் சொற்கள் அல்ல இல்லற வாழ்வின் சமாதானத்தின் கதவுகள். "தயவு செய்து" என்ற சொல் உரிமையின் குரலை தாழ்மையின் மொழியாக மாற்றுகிறது. "நன்றி" என்ற சொல் அன்பை உணர்ந்து மதிக்கச் செய்கிறது. "மன்னிக்கவும்" என்ற சொல் காயமடைந்த உறவை மீண்டும் குணப்படுத்தத் தொடங்குகிறது.

இன்றைய காலத்தில் வேலைப்பளு, பொருளாதார அழுத்தம், சமூக ஊடகச் சிதறல்கள், குடும்பப் பொறுப்புகள், மனச்சோர்வு, ஒப்பீடுகள், செவிகொடுக்காத மனப்பான்மை ஆகியவை பல இல்லங்களின் அமைதியை குலைக்கின்றன. எனவே தம்பதியர் தங்கள் இல்லற வாழ்வை விழிப்போடும் அருளோடும் பாதுகாக்க வேண்டும். அதற்காக தம்பதிகள் ஒருவர் மற்றவரோடு நாளாந்த உரையாடல் செய்வது அவசியமாகும். ஒருவர் மற்றவரோடு பகிரப்படாத பேசப்படாத வேதனைகள் மனங்களில் சுவர்களை எழுப்புகின்றன. வாரத்தில் ஒரு முறையாவது ஒருவர் மற்றவருக்கருகில அமர்ந்து, "இந்த வாரம் உன்னை மகிழ்ச்சிப்படுத்தியது என்ன? உன்னை காயப்படுத்தியது என்ன? நான் உனக்காக இன்னும் மகிழ்வாக்க இன்னும் என்ன செய்யலாம்?" என்று மனம் திறந்து பேசுவது இல்லற மகிழ்வைக் தினமும் வளர்க்கும் வழிவகைகளாகும்.

குடும்ப வாழ்வு உடையாமல் காக்க மன்னிப்பு மிகஅவசியமானதாகும். மன்னிப்பு என்பது உறவை தவறைவிட உயர்ந்ததாகக் காண்பது என்பதாகும். கோப நேரங்களிலும் ஒருவரின் மாண்பை மற்றொருவர் காக்க வேண்டும். "நீ எப்போதும் இப்படித்தான்" என்று குற்றம் சாட்டுவதற்குப் பதிலாக, "நீர் செய்த இந்த விடயம் என்னை வருத்துகிறது எனவே நாம் இதனைப்பற்றி சற்று அமர்ந்து அமைதியாகப் பேசலாமா?" என்று சொல்லும் அன்பு மொழிகள் குடும்ப அமைதியையும் மகிழ்வையும் காக்கும். மேலும் இணைந்த ஆன்மிக வாழ்வு தம்பதியரின் உறவை நாளுக்கு நாள் ஆழப்படுத்தும். குடும்ப செபம், திருப்பலி, இணைந்த இறைவாக்கு வாசிப்பு, ஆழமான இறைநம்பிக்கை ஆகியவை இல்லற வாழ்வை தெய்வீக அருளின் பாதைக்கு உயர்த்துகின்றன. தினமும் இருவரும் இணைந்து நீண்ட செபம் செய்ய முடியாவிட்டாலும், இரவில் இருவரும் இணைந்து கரங்களைக் இணைத்து ஒரு "விண்ணுலகில் இருக்கிற எங்கள் தந்தையே", ஒரு "அருள் நிறைந்த மரியே", அல்லது ஒருவர் மற்றவர் நெற்றியில் சிலுவை அடையாளம் இட்டுத் தூங்குவது கூட இல்லறத்தை புனிதப்படுத்தும்.

தம்பதிகளின் நலம் இல்லாத இடத்தில் குடும்ப வாழ்க்கை சுமையாக மாறும். எனவே உண்மையான இல்லறம் என்பது, கணவன் மனைவி ஒருவரின் நலனில் மற்றொருவர் அக்கறையோடு வாழ்ந்து, அந்த அன்பை உயிருக்கும் கருணைக்கும் திறந்த மனமாக விரிவுபடுத்தும் வாழ்க்கையாகும்.

ஒரு மாலை, வயதான தம்பதியர் வீட்டு வாசலில் அமைதியாக அமர்ந்திருந்தனர். கணவர் மனைவி அமர்வதற்கான நாற்காலியைச் சரிசெய்தார். மனைவி அவருக்காக தேநீரை தயாரித்து கணவன் அருகில் வைத்தார். இந்த வயதான தம்பதிகளின் இடைவே வார்த்தைகள் குறைவு. ஆனால் அவர்கள் மத்தியில் அன்பு நிறைவாக இருந்தது. அதை பார்த்த அவர்களின் பேரப்பிள்ளை தன் தாயிடம் கேட்டான்: "அம்மா, அவர்கள் ஏன் அதிகம் எதுவும் பேசுவதில்லை?" தாய் சொன்னாள்: "மகனே, சில அன்புகள் வார்த்தைகளால் விளக்கப்பட வேண்டிய நிலையைத் தாண்டி, வாழ்வின் அமைதியான செயல்களிலேயே தம்மை வெளிப்படுத்தக் கற்றுக்கொண்டிருக்கின்றன." திருமணம் இப்படிப்பட்ட அன்பிற்கான பாதை. அது ஒரு நாள் மட்டும் கொண்டாடப்படுகின்ற ஓர் ஆடம்பரத் திருவிழா அல்ல. மாறாக ஆயுள் முழுவதும் அன்பினால் பரஸ்பர நல்லுறவில் காக்கப்பட வேண்டிய ஓர் புனிதமான உடன்படிக்கை.

**ஒவ்வொரு தம்பதியும் சிறிது நேரம் நின்று, ஒருவரின் கண்களை ஒருவர் பார்த்து, இதயத்திலிருந்து மூன்று சொற்களைச் சொல்ல முயல வேண்டும்: "நன்றி", "மன்னித்துவிடு", "நொன் உன்னுடன் இருக்கிறேன்" இவை சாதாரண சொற்கள் அல்ல அன்பை மீண்டும் உயிர்ப்பிக்கும் சிறிய அருள்வழிகள்.**



**எனவே திருமணத்தில் தம்பதிகளின் நலமானது திருமணத்தின் இதயத் துடிப்பு.**
**பிள்ளைப்பேறு அதன் உயிர்தரும் கனி.**
**மன்னிப்பு அதன் மூச்சு.**
**செபம் அதன் ஒளி.**
**விசுவாசம் அதன் வேர்.**

இன்று இரவு, ஒவ்வொரு தம்பதியும் சிறிது நேரம் நின்று, ஒருவரின் கண்களை ஒருவர் பார்த்து, இதயத்திலிருந்து மூன்று சொற்களைச் சொல்ல முயல வேண்டும்: "நன்றி", "மன்னித்துவிடு", "நான் உன்னுடன் இருக்கிறேன்." இவை சாதாரண சொற்கள் அல்ல அன்பை மீண்டும் உயிர்ப்பிக்கும் சிறிய அருள்வழிகள். இம்மூன்று சொற்கள் ஒரு நாளை மென்மையாக்கலாம் மென்மையாக்கப்பட்ட ஒரு நாள் ஒரு இல்லத்தின் பாதை யையே மாற்றலாம் மாற்றமடைந்த ஒரு இல்லம் ஒரு தலைமுறைக்கே ஆசீர்வாதமாக மாறலாம்.

# க.பொ.த.சா:த கத்தோலிக்க திருமறை மாதிரி வினாக்களும் விடைகளும் (வினாப்பத்திரம் - 03)

**மிகப்பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.**

01. அடையாளங்களைப் பயன்படுத்தி எழுதப்பட்ட பழைய ஏற்பாட்டின் வெளிப்படுத்தல் நூல்
1. மக்கபேயர் 2. தொடக்கநூல் 3. தானியேல் 4. எஸ்ரா

02. திருமுழுக்கு யோவான் பாலைவனத்தில் ஆற்றிய போதனையுடன் ஆரம்பமாகும் நற்செய்தி
1. மத்தேயு 2. லூக்கா 3. யோவான் 4. மாற்கு

03. வெளிப்பாட்டு இலக்கியத்தின் பண்பு அல்லாதது பின்வருவனவற்றில்
1. இருதன்மைகள் 2. இறையியல் கருத்துக்களை முன்வைத்தல்
3. இறுதிக்காலம் 4. அடையாளங்களின் பயன்பாடு

04. பின்வரும் கூற்றுக்களில் இயேசு சிலுவையில் தொங்கிக் கொண்டிருந்த வேளையில் நடைபெற்ற சம்பவங்களுடன் தொடர்புடையவை.
**A** - புளித்த திராட்சை இரசத்தைக் குடிக்கக் கொடுத்தனர்.
**B** - நீ மெசியாதானா என வினவினர்
**C** - இயேசுவை ஏளனம் செய்தனர்
**D** - இவன் நம் மக்கள் சீரழியக் காரணமானவன் எனப் பேசினார்கள்
1. AAயும் CAயும் 2. AAயும் BAயும் 3. CAயும் DAயும் 4. AAயும் DAயும்

05. எழுத்தாளர்களுக்குப் பாதுகாப்பை ஏற்படுத்துவதுடன் தொடர்புடைய வெளிப்பாட்டு இலக்கியத்தின் பண்பு.
1. இறுதிக்காலம் 2. புனைபெயர்களை முன்வைத்தல்
3. அடையாளங்களின் பயன்பாடு 4. இருதன்மைகள்

06. வெளிப்பாட்டு இலக்கியத்தில் குறிப்பிடப்படுகின்ற ஆட்டுக்குட்டி யாரைக் குறிக்கின்றது.
1. திருமுழுக்கு யோவான் 2. ஆபிரகாம் 3. மோசே 4. இயேசுக்கிறிஸ்து

07. சீரியப் பேரரசை 4ம் அந்தியோக்கஸ் அரசன் ஆட்சி செய்த காலப்பகுதி.
1. கி.பி.167 - 168 2. கி.மு.167 - 164 3. கி.பி.167 - 164 4. கி.மு.167 - 180

08. திருவெளிப்பாட்டு நூலின் பதில் எழுத்தாளர்
1. திருத்தூதர் பவுல் 2. திருத்தூதர் பேதுரு
3. திருத்தூதர் யோவான் 4. திருமுழுக்கு யோவான்

09. A – வெள்ளை C – கறுப்பு B – சிவப்பு D – வெளிறிய நிறம்
வெளிப்பாட்டு இலக்கியத்தில் மரணம், பஞ்சம் என்பவற்றை குறிப்பது
1. C,A 2. B,D 3. B,A 4. D,C

10. கி.பி. 80 - 96 காலப்பகுதியில் கிறிஸ்தவர்களைக் கொடிய வேதனைக்கு உள்ளாக்கிய உரோமைப் பேரரசன்
1. நீரோ மன்னன் 2. வலேரியன் 3. தொமிசியன் 4. அவுரேலியன்

11. “என் கடவுளாகிய ஆண்டவரே நீர் அடியேனை என் தந்தை தாவீதுக்குப் பதிலாக ....” இடைவெளிக்குப் பொருத்தமான சொல்.
1. தேர்ந்துகொண்டீர் 2. அரசனாக்கினீர் 3. அழைத்துக்கொண்டீர் 4. இறைவாக்கினராக்கினீர்

12. கூற்று :- மலை உச்சியில் சாலமோன் 1000 எரிபலி செலுத்தினார்
காரணம் :- கிபியோன் மலை உச்சியில் பிரதான பலிப்பீடம் அமைந்திருந்தது.
1. கூற்றுப் பிழை காரணம் சரி 2. கூற்றும் காரணமும் பிழை
3. கூற்றுச் சரி காரணம் பிழை 4. கூற்றும் காரணமும் சரி

13. ‘ஞானம் என்பது தூய ஆவியின் கொடைகளில் ஒன்று’ ஆதலால் ஞானத்தைப் பெற்றுக்கொள்ள
1. தினந்தோறும் செபிக்க வேண்டும் 2. பாடல் பாட வேண்டும்
3. ஒவ்வொருவருடனும் அன்பாகப் பழக வேண்டும் 4. அன்பு செய்ய வேண்டும்

14. ஞானம் என்பதற்குப் பயன்படுத்தப்படும் எபிரேயச் சொல்
1. சாலோம் 2. றதா 3. லிட்டர்ஜியா 4. ஹொக்மா

15. ஞான இலக்கியத்தில் அடங்கும் நூல்களின் எண்ணிக்கை
1. 8 2. 6 3. 9 4. 7

16. பழைய ஏற்பாட்டில் ஞானம் பற்றிய கருத்துக்கள் பல்வேறு இலக்கிய அமைப்புக்களினூடாக முன்வைக்கப்பட்டுள்ளன. அந்த வகையில் ஞானம் பற்றிய போதனைகளைக் கற்பனை வடிவில் வெளிப்படுத்துகின்ற நூல்.
1. நீதிமொழிகள் 2. யோபு 3. சபை உரையாளர் 4. சீராக்கின் ஞானம்

17. இயேசுவின் உயிர்ப்பிற்கு முதல் சாட்சியானவர்
1. மகதலா மரியா 2. மரியாள் 3. கபிரியேல் தூதன் 4. தோமா

18. இயேசுவின் இறந்த உடலை சிலுவையில் இருந்து இறக்கி அடக்கம் செய்ய முன்வந்தவர்
1. அரிமத்தியா ஊர் சிமியோன் 2. அரிமத்தியா ஊர் யோசேப் 3. பேதுரு 4. தோமா

19. A - பேதுரு B - யோவான் C - மத்தேயு D - தோமா இவர்களில் பாஸ்கா ஞாயிறன்று மாலை உயிர்த்த இயேசு திருத்தூதர்களிற்குக் காட்சி கொடுத்த வேளை அவர்களோடு இல்லாதிருந்த திருத்தூதர்
1. A 2. B 3. C 4. D

20. “இயேசுவே நீர் ஆட்சியுரிமை பெற்று வரும் போது என்னையும் நினைவில் கொள்ளும்” இவ்வாறு கூறியது
1. பேதுரு 2. யூதாஸ் 3. கள்வர்களில் ஒருவர் 4. பரபாஸ்

| | நற்செய்தியாளர் | | காலம் | | அடையாளம் | | இடம் |
|---|---|---|---|---|---|---|---|
| A | மாற்கு | E | கி.பி. 64 - 66 | I | மனித முகம் | M | எபேசு |
| B | மத்தேயு | F | கி.பி. 90 - 100 | J | சிங்கம் | N | உரோமைநகர் |
| C | லூக்கா | G | கி.பி. 80 - 90 | K | கழுகு | O | பலஸ்தீனா |
| D | யோவான் | H | கி.பி. 80 - 85 | L | எருது | P | சீரியா அந்தியோக்கியா |

**21 தொடக்கம் 25 வரையான வினாக்களிற்கு அட்டவணையின் உதவியுடன் விடை தருக**

21. இயேசுவின் போதனைகள் வல்ல செயல்களைக் குறிப்பிடுவதைவிட அவருடைய இறை தன்மையினை வெளிப்படுத்தும் நற்செய்தியையும் அடையாளத்தையும் குறிக்கும் ஆங்கில எழுத்து. 1. A,J 2. C,L 3. B,I 4. D,K

22. புதிய ஏற்பாட்டில் இயேசு நமக்குச் சட்டங்களைக் கொடுத்ததாகக் காட்டுகின்ற நற்செய்தி எழுதப்பட்ட காலம்.
1. E 2. F 3. G 4. H

23. ‘இயேசு யூதர்களிற்கு மட்டுமல்ல உலகத்திற்கெல்லாம் மீட்பர்’ என்று தனது நோக்கத்தை கூறிய நற்செய்தியாளர்.
1. A 2. B 3. C 4. D

24. தூய பேதுருவின் மொழி பெயர்ப்பாளராகச் செயற்பட்டவரால் எழுதப்பட்ட நற்செய்தி, எழுதப்பட்ட இடம், எழுதப்பட்ட காலம் என்பன குறிக்கும் ஆங்கில எழுத்து.
1. N,E 2. M,F 3. O,H 4. P,G

25. இயேசுவின் தலைமுறை அட்டவணையுடன் ஆரம்பிக்கும் நற்செய்தி எழுதப்பட்ட இடம்.
1. M 2. N 3. O 4. P

26. படைப்புப் பற்றிய முதல்கதை எழுதப்பட்ட மரபு.
1. J 2. P 3. E 4. D

27. “அந்த மரம் உண்பதற்கு சுவையானதாகவும் கண்களுக்கு ...” இடைவெளிக்குப் பொருத்தமான சொல்.
1. வடிவாகவும் 2. அழகானதாகவும் 3. களிப்பூட்டுவதாகவும் 4. மேன்மையானதாகவும்

28. இறைவன் ஆதிப்பெற்றோருக்கும், காயீனுக்கும் தண்டனை கொடுத்தது.
1. கோபத்தினால் 2. பொறாமையினால் 3. அன்பினால் 4. மேற்கூறிய யாவும் சரி

29. பின்வருவனவற்றில் ஏவாளுக்குக் கொடுக்கப்பட்ட தண்டனைகள்
A - உன் பொருட்டு நிலம் சபிக்கப்படும்
B - வேதனைகளில் நீ குழந்தைகளைப் பெறுவாய்
C - உன் கணவன் மேல் நீ வேட்கை கொள்வாய்
D - மண்ணுலகில் நீ நாடோடியாய் அலைந்து திரிவாய்
1. A,B 2. B,C 3. C,D 4. A,D

30. ஆண்டவராகிய கடவுள் மனிதனுக்கும் அவன் மனைவிக்கும் தோல் ஆடைகள் செய்து அவர்களை அணியச் செய்தார். இங்கு வெளிப்படுகின்ற இறைவனின் பண்பு
1. அன்பு, கோபம் 2. இரக்கம், அரவணைப்பு 3. அன்பு, இரக்கம் 4. உண்மை, நேசம்

31. நோவாவிடம் காணப்பட்ட நற்பண்பு அல்லாதது.
1. இறையுறவில் நிலைத்திருந்தார் 2. அவர் நீதிமான்
3. குற்றமற்றவராக இருந்தார் 4. பிறரின் குற்றங்களைப் பொறுத்துக் கொள்ளமாட்டார்

32. புதுப்படைப்பின் ஆரம்ப கர்த்தாவாக இருப்பவர்.
1. ஆபிரகாம் 2. யோசேப் 3. நோவா 4. யாக்கோபு

33. திருவிவிலியத்தில் வரலாற்றிற்கு முற்பட்ட காலம் என அழைக்கப்படும் பகுதி.
1. தொடக்க நூல் 1-11 2. தொடக்க நூல் 1-12
3. தொடக்க நூல் 12-24 4. தொடக்க நூல் 1-24

34. படைப்புப் பற்றிய 2ம் கதைக்குரிய மரபு.
1. J 2. P 3. D 4. E

35. எம்மாவு சீடர்கள் உயிர்த்த இயேசுவைக் கண்டுணர்ந்தது.
1. இயேசுவின் போதனையின் போது 2. இயேசு உயிர்த்த போது
3. அப்பத்தைப் பிட்டுக் கொடுத்த போது 4. இயேசு புதுமை செய்த போது

36. இறையன்பினதும் இயேசு கிறிஸ்துவின் கீழ்ப்படிதலினதும் அடையாளமாக விளங்குவது.
1. சிலுவை 2. ஆட்டுக்குட்டி 3. திருவிவிலியம் 4. தேவாலயம்

37. கி.பி. 80 - 90க்கு இடைப்பட்ட காலப்பகுதியில் எழுதப்பட்டது.
உரோமைப் பேரரசனால் துன்புறுத்தலுக்கு உள்ளான கிறிஸ்தவர்களிற்கு நம்பிக்கை ஊட்ட எழுதப்பட்டது. இக் கூற்றுக்களுடன் தொடர்புடைய நூல்.
1. தானியேல் 2. திருத்தூதர்பணிகள் 3. திருவெளிப்பாடு 4. யோவான்

38. பெருவெள்ளக் கதையின் மூலம் திருவிவிலிய ஆசிரியர் எடுத்துக்காட்டும் செய்தி.
1. மனிதனை அழிப்பது
2. மனிதன் மூலம் வளர்ச்சியடைந்த பாவத்தை அகற்றிப் புதுயுகம் உருவாக்குவது
3. மனிதனைத் தண்டிப்பது
4. மனிதர்களிற்குத் துன்பத்தை விளைவிப்பது

39. ‘சபாத’ நாளின் முக்கியத்துவம் பற்றி எடுத்துக் காட்டும் மரபு.
1. குருமரபு 2. யாவே மரபு 3. ஏலோகிம் மரபு 4. இணைச்சட்ட மரபு

40. ‘வெளிப்பாடு’ என்பதைக் குறிக்கப் பயன்படுத்தப்படும் கிரேக்க சொல்லின் அர்த்தம்.
1. இருதன்மைகள் 2. இறுதிக்காலம்
3. மறைவான ஒன்று 4. மறைந்துள்ள ஒன்று வெளிப்படுதல்

## பகுதி 02

**வினா இலக்கம் 01**

01. இறைவன் காயீனுக்குக் கொடுத்த தண்டனைகளில் இரண்டு தருக?
02. தொடக்க நூல் 3:6 இன்படி ஏவாளின் மனதில் ஆசை பேசிய முறைமையை வெளிப்படுத்தும் வார்த்தைகள் இரண்டு தருக?
03. ஏனைய படைப்புக்களை விட மனிதன் மேன்மையானவன் என்பதை வெளிப்படுத்தும் பண்புகள் இரண்டு தருக?
04. இயேசுவால் அழைக்கப்பட்ட முதல் சீடர்களில் இருவரை எழுதுக?
05. பாடுகளின் நற்செய்தியையும் இறையாட்சியின் நற்செய்தியையும் எழுதுக?
06. ஞான இலக்கியங்களில் இரண்டினை எழுதுக?
07. இயேசு சிலுவையில் உயிர்விட்ட நேரத்தில் நடைபெற்ற நிகழ்வுகள் இரண்டு தருக?
08. வெளிப்பாட்டு இலக்கியத்தின் பண்புகளில் இரண்டினை எழுதுக?
09. வெளிப்பாட்டு இலக்கியத்தில் வரும் அடையாளங்கள் இரண்டினையும் அவை குறிக்கும் அர்த்தத்தையும் தருக?
10. ஞானம் பற்றிய போதனைகள் முன்வைக்கப்பட்டுள்ள இலக்கிய அமைப்புக்கள் இரண்டினை எழுதி அவற்றிற்கு உ+ம் தருக?

**விடைகள்**

| | | | |
|---|---|---|---|
| 1 - 3 | 11 - 2 | 21 - 4 | 31 - 4 |
| 2 - 4 | 12 - 4 | 22 - 3 | 32 - 3 |
| 3 - 2 | 13 - 1 | 23 - 3 | 33 - 1 |
| 4 - 1 | 14 - 4 | 24 - 1 | 34 - 1 |
| 5 - 2 | 15 - 4 | 25 - 3 | 35 - 3 |
| 6 - 4 | 16 - 3 | 26 - 2 | 36 - 1 |
| 7 - 2 | 17 - 1 | 27 - 3 | 37 - 1 |
| 8 - 3 | 18 - 2 | 28 - 3 | 38 - 2 |
| 9 - 4 | 19 - 4 | 29 - 2 | 39 - 1 |
| 10 - 3 | 20 - 3 | 30 - 3 | 40 - 4 |

01. நீ சபிக்கப்பட்டிருக்கின்றாய்.
மண்ணுலகில் நீ நாடோடியாய் அலைந்து திரிவாய்.
02. ▸ இந்த மரம் உண்பதற்குச் சுவையானது. - கண்களுக்குக் களிப்பூட்டுவது.
அறிவு பெறுவதற்கு விரும்பத்தக்கது
03. ▸ புத்தி ▸ சுயாதீனம் ▸ அழியாத ஆன்மா
04. ▸ யோவான், ▸ அவரது சகோதரர் யாக்கோபு ▸ பேதுரு ▸ அந்திரேயா
05. ▸ பாடுகளின் நற்செய்தி - மாற்கு ▸ இறையாட்சியின் நற்செய்தி - மத்தேயு
06. ▸ யோபு ▸ திருப்பாடல்கள் ▸ சபை உரையாளர்கள் ▸ நீதி மொழிகள்,
07. ▸ கதிரவன் இருண்டு நாடு முழுவதும் இருள்
▸ தேவாலயத்தின் திரைச்சீலை இரண்டாக கிழிதல்.
08. ▸ இருதன்மைகள் ▸ இறுதிக்காலம்.
▸ அடையாளங்களின் பயன்பாடு ▸ புனைபெயர்களை முன்வைத்தல்
09. ▸ ஆட்டுக்குட்டி - இயேசுக்கிறிஸ்து ▸ அரக்கப் பாம்பு ▸ சாத்தான்
10. ▸ பழமொழிகள் - நீதிமொழிகள் ▸ கதைகள் - யோபு
▸ அறிவுரை ▸ சீராக்கின் ஞானம் ▸ கற்பனைகள் - சபை உரையாளர்

**யாழ். மறைமாவட்ட கத்தோலிக்க ஆசிரியர் சங்கம்**
**யாழ். மறைக்கல்வி நிலையம்.**




# என் கேள்விக்கென்ன பதில்!

**அருட்பணி செ. அன்புராசா**

(அன்ரன், யாழ்ப்பாணம்)

**கேள்வி: சிலரின் வாழ்க்கை, பாதிவழிப் பயணமாகி விடுகிறதே! ஏன்?**

**பதில்:** ஒருவரின் வாழ்க்கை, பாதி வழிப் பயணமா? அல்லது பரலோக வழிப் பயணமா என்பது அவர் வாழ்ந்த ஆண்டுகளைக் கொண்டு கணிக்க முடியாது! வாழ்வென்பது எத்தனை ஆண்டுகள் இவ்வுலகில் இருந்தோம் என்பதல்ல, எத்தனை மனிதர்களின் மனங்களில் உயிராய், உயிர்ப்பாய் இருந்தோம் என்பதுதான் நாம் வாழ்ந்தோம் என்பதில் உள்ள சிறப்பு!

(கனி, யாழ்ப்பாணம்)

**கேள்வி: வாழ்க்கை நிலையும் அதன் தரமும் வரவர மோசமாகப் போய்க் கொண்டிருக்கிறது! இப்படியே போனால் என்னாகும்!**

**பதில்:** இப்படியே போனால் விரைவில் முதலிடத்தை நம் நாடு அடைந்துவிடும்!!! உலகில் வாழ்க்கைத் தரம் மிகவும் குறைந்த நாடுகளின் வரிசையில் இலங்கை இரண்டாமிடம்! முதலாமிடம் நைஜீரியா, மூன்றாமிடம் பங்களாதேக்ஷ்! பொருளாதார சவால்கள், வாழ்க்கைச் செலவு, வருமான நிலை, அடிப்படைச் சேவைகள், பொது மக்களின் வாழ்வாதார சூழல் போன்றவற்றை அடிப்படையாகக் கொண்டு நாடுகளின் வாழ்க்கைத் தரம் கணிக்கப்படுகிறது. அப்படிப் பார்த்தால் நமது நிலை கவலைக்கிடந்தான்!

(குணம், மன்னார்)

**கேள்வி: குடி, இன்று பலருடைய குடும்பங்களில் பெரும் பிரச்சினையாகி வருகிறது. கட்டுப்படுத்துவது கடமையல்லவா!?**

**பதில்:** குடி, போதையில் வாகனம் செலுத்துவதுதான் வீதி விபத்துகளுக்கு முக்கிய காரணம் என்று கூறப்படுகிறது. அதனால் குடித்துவிட்டு வாகனத்தைச் செலுத்தாதே என்கிறது அரசு! 'குடித்தால் வாகனம் ஓட்ட முடியாது எனத் தெரிந்த அரசுக்கு அவன் குடித்தால் குடும்பம் நடத்த முடியாது என்று ஏன் தெரியவில்லை!!!' என்ற கூற்றினை அனைவரும் சிந்தனை செய்து பார்க்கவேண்டும். அரசுகள் குடியை நிறுத்த ஆவனை செய்யாது! காரணம், அரசுக்கு ஒரு கல்லில் இரு மாங்காய்கள் கிடைக்கின்றன! மது விற்பனையால் வரி வருமானமாக அரசுக்கு வருகிறது. மதுவைக் குடித்துவிட்டு வாகனம் செலுத்துவதால் தண்டப் பணம் வருமானமாக வருகிறது. அப்படியென்றால் எப்படி 'அமுத சுரபி'களைப் ('பார்'களின் இன்றைய பெயர்கள்!) பூட்டவோஃகுறைக்கவோ முடியும்! உண்மையில் அதன் வருகை இன்னுமும் அதிகரிக்கும்!

(அன்ரன், யாழ்ப்பாணம்)

**கேள்வி: 'சீரியஸ்'சாக் கேள்வி கேட்கின்றபோது, பகிடி மாதிரி 'சீரியஸ்'ஆகப் பதில்சொல்லி முடிக் கின்றீரகள்! உங்களால் எப்படி முடிகின்றது?**

**பதில்:** அன்ரன், நீங்கள் 'சீரியஸ்' மாதிரிப் பகிடி விடுறீங்கள்! சரிதானே! அதனால்-தான், 'சீரியஸ்'சாக் கேள்வி கேட்கிறபோது, பகிடி மாதிரி 'சீரி யஸ்'ஆகப் பதில்கூறுகி றேன்!

(எழில், யாழ்ப்பாணம்)

**கேள்வி: உங்கள் பதில்களைப் படித்தால் எங்கள் சிந்தனையைக் கிளறிவிடுவதுபோல தெரிகியது! சிந்திக்கத் தூண்டுவது, சிந்திக்க வைப்பது மிகவும் முக்கியம். சிந்தனை செய்வது பற்றிக் கொஞ் சம் விரிவாகக் கூற முடியுமா?**

**பதில்:** நண்பர் ஒருவர் சில நாள்களுக்கு முன் அலைபேசியில் கதைக்கிறபோது, "உங்கள் எழுத்துகளால் எங்கள் சிந்தனைகளைக் கிளறி விடுகிறீர்கள்!" எனக் கதைக்கிறபோது குறிப்பிட்டார். அதனையே அவர் தமது கருத்துப் பதிவொன்றிலும் பதிவிட்டிருந்தார். அவரின் கருத்தை ஒப்புக்கொண் டேன். கோழிகள், கிளறிக் கிளறித்தான் இரையை உண்ணும். அக்கிளறலில் அவற்றுக்கான உணவை உறுதிசெய்கிறது, பகுத்தாய்ந்து பார்க்கி-றது, தெளிவைப் பெறுகிறது. 'விதைத்துக் கொண்டே இரு! முளைத்தால் மரம். இல்லை யென்றால் மண்ணிற்கு உரம்' என்று யாரோ ஒரு சிந்தனை யாளர் கூறியது என் சிந்தையைக் கிளறிவிட்டது. அது போல, 'வாய்ப்புக் கிடைத்தாலென்ன கிடைக்கா விட்டாலென்ன அறிவித்துக்கொண்டே இரு' என்ற இறைவாக்கும் என் சிந்தையை செதுக்கியிருக்கிறது. அவைதான் இந்தச் சிந்தனைக் கிளறலுக்குக் காரணமோ என எனக்குள்ளே நான் எண்ணிப் பார்க்கி றேன்.

ஆங்கிலத்தில் 'Thinking within the box', 'Thinking out of the box' என்று இரு சொற் றொடர்களைப் பயன்படுத்துவார்கள். 1வது: கட்டுப் பாடுகளுக்குள்/ வரையறைக்குள்/ குறிப்பிட்ட நடைமுறைக்குள்/ குறித்த எல்லைகளுக்குள் நின்று ஒரு விடயத்தைக் குறித்துச் சிந்திப்பது. இச்சிந்தனைப் போக்கு வழக்கமான, வரையறைக்கு உட்பட்டதாக இருக்கும். 2வது, புதுமையாக, கட்டுப்பாடுகளைக் கடந்து, வரை யறைகள் இன்றிச் சிந்திப்பது. எந்தவிதக் கட்டுப்பாடும் இன்றி, சுதந்திரமாக, பாரபட்டமின்றி, பக்கச் சார் பின்றி அலசி ஆராந்து புதிய கோணங்களில் சிந்திப் பது. வழக்கமாக சிந்தனைப் போக்கை மாற்றிக் கொஞ் சம் வித்தியாசமாக, புதிதாகச் சிந்திப்பது புதிய கண்டங் களைக் கண்டுபிடிக்க உதவும். மேலும் 'Think Tank' என்றொரு சொற்றொடரையும் பயன்படுத்துகிறார்கள். தமிழில் 'சிந்தனைக் குழாம்'/ 'சிந்தனைத் தொட்டி' என ஒரு நிறுவனத்திற்கு /அமைப்பிற்கோ/ மக்கள் குழுமத் திற்கோ/கட்சிக்கோ/ அரசுக்கோ/ நாட்டுக்கோ இருக்கலாம். அக்குழாம் புதிய சிந்தனைகளை, நல்லாலோசனை-களை நிர்வாகத் திற்கு வழங்குகிறது. அவ்வாலோச னைகள், பொதுவாக, ஆக்கபூர்வமானவையாக அமை யலாம். அவ்வாறு அமையும் பட்சத்தில், குறிப்பிட்ட அமைப்போ/ நிறுவனமோ/ மக்கள் குழுமமோ/ நாடோ/ அரசோ வளர்ச்சிப் பாதையில் பயணிக்கும். இது தனிம-னித வாழ்வுக்கும் பொருந்தும். தண்ணீர்த் தொட்டி, தீவனத் (உணவுத்) தொட்டி, எரிபொருள் தொட்டி என்பவற்றைப் போல சிந்தனைத் தொட்டியும் கட்டாயமான, அவசியமான தேவையாகும். "சிந்தனை செய்மனமே! தினமே சிந்தனை செய்மனமே, செய்தால், தீவினை அகன்றிடுமே..!" என்றொரு அருமை யான பழைய பாடல் உண்டு. ஆங்கிலத்தில், "I think therefore I am." இலத்தினில், "Cogito, ergo sum" என்பது மெய்யியல் அறிஞர் ரெனே டெக்காட் முன்மெ-ாழிந்த ஒரு கருத்தியலாகும். தமிழில், "சிந்திக்கிறேன், அதனால் இருக்கிறேன்" என்பதுதான் அது! சுருங்கச் சொன்னால், சிந்திப்பதால்தான் நான் இருக்கிறேன்ஃ வாழ்கிறேன் என்பது பொருள்! "சும்மா இருந்த மனிசனக் கேள்வி கேட்டுக் கிளறிவிட, அவர் எங்களப் போட்டுக் கிளறுகிறார்" என நீங்கள் எண்ணுகிறீர்களா?


## விண்ணக வாழ்வின் நினைவலைகள்

பிறப்பு 03 . 01 . 1994

இறப்பு 21 . 02 . 2026



அமரர்

**தேவராஜா சுலக்ஸ்றீடா ஜெசி**

'நான் இருக்கும் இடத்திலே அவர்களும்
என்னோடு இருக்க விரும்புகிறேன்'
(யோவான் 17:24)

குடும்பத்தினர்



## விண்ணக வாழ்வின் 2ம் ஆண்டு நினைவு

பிறப்பு 17 . 08 . 1936

இறப்பு 21 . 05 . 2024



அமரர்

**கி. ஜேசுராஜன்**

(ஓய்வு நிலை ஆசிரியர் - சென் ஜேம்ஸ் மகா வித்தியாலயம்)
புனித வின்சன் டி போல் சபை மூத்த உறுப்பினர்
புனித ஆசீர்வாதப்பர் பந்தி, நல்லூர்

ஆண்டுகள் இரண்டு கடந்தாலும்
ஆண்டாண்டுகள் சென்றாலும்
எங்கள் நெஞ்சத்தில் நீங்காத நிலைவலையாய்
எங்களோடு இருக்கின்றீர்
கம்பீரமான உங்கள் தோற்றமும்
கணீரென்ற உங்கள் குரலும்
எங்கள் வீடுகளில் நடமாடி ஒலிக்கிறதே
எங்களை விட்டு அகலவில்லையே

தியாகங்கள் பல செய்து எங்களை உருவாக்கினீர்
தியாக பணியாக ஆசிரிய பணிதனில் உழைத்தீர்
அப்பணிதனில் எம்மையும் இணைத்தீர்
அமைதியாக அவணியை விட்டுச் சென்றீர்
88 ஆண்டுகள் ஆசீர்வாதப்பர் பாதம் நாடிய நீங்கள்
அவரிடம் எமக்காய் மன்றாடும்
அவர் பாதத்தில் அமைதியாய் இளைப்பாறும்

என்றும் உங்கள் நினைவுகளுடன் வாழும்
மனைவி , பிள்ளைகள்,
மருமக்கள் ,பேரப்பிள்ளைகள்

60,சென் பெனடிக்ற் வீதி ,
நல்லூர், யாழ்ப்பாணம்.

AD-137

# தூய ஆவியார் பெருவிழா

தூய ஆவியார் பெந்தகோஸ்துப் பெருவிழாவை முன்னிட்டு வருடாந்தம் நடைபெறும் தூய ஆவியார் திருவிழிப்பு ஆராதனை இவ்வருடம் மறைமாவட்டரீதியாக யாழ்ப்பாணம் மாங்குளம் ஆகிய இரு இடங்களில் மட்டும் முன்னெடுக்க ஏற்பாடுகள் நடைபெற்றுவருகின்றன.

யாழ். புனித மடுத்தீனார் சிறிய குருமட மைதானம் மற்றும் மாங்குளம் இறை இரக்க தியான நிலையத்தில் வைகாசி மாதம் 23ஆம் திகதி சனிக்கிழமை மாலை 6.00 மணியிலிருந்து ஞாயிற்றுக்கிழமை அதிகாலை வரை நடைபெறவுள்ள இத்திருவிழிப்பு ஆராதனையில் தூய ஆவியாரின் துணை வேண்டி நம்பிக்கையோடு செபிக்க அனைவரும் அழைக்கப்பட்டுள்ளனர்.

யாழ்ப்பாணத்தில் பருத்தித்துறை, தீவகம், இளவாலை மற்றும் யாழ்ப்பாண மறைக்கோட்ட இறைமக்களை இணைத்து முன்னெடுக்கப்படவுள்ள வழிபாடுகள் ஜெரிக்கோ செபம், திருச்செபமாலையுடன் ஆரம்பமாகி யாழ். மறைமாவட்ட ஆயர் பேரருட்தந்தை யஸ்ரின் ஞானப்பிரகாசம் அவர்களின் தலைமையில் திருவிழிப்புத் திருப்பலியும் தொடர்ந்து ஆராதனைகளும் இடம்பெறவுள்ளன.

மாங்குளத்தில் முல்லைத்தீவு, கிளிநொச்சி மறைக்கோட்ட இறைமக்களை இணைத்து முன்னெடுக்கப்படவுள்ள வழிபாடுகள் ஜெரிக்கோ செபம் திருச்செபமாலையுடன் ஆரம்பமாகி யாழ். மறைமாவட்டக் குருமுதல்வர் அருட் தந்தை ஜெபரட்ணம் அவர்களின் தலைமையில் திரு விழிப்பு திருப்பலியும் தொடர்ந்து ஆராதனைகளும் நடைபெறவுள்ளன.

# கொழும்புத்துறை புனித பிரான்சிஸ் சவேரியார் உயர் குருத்துவ கல்லூரி மெய்வல்லுனர் போட்டி



யாழ். கொழும்புத்துறை புனித பிரான்சிஸ் சவேரியார் உயர் குருத்துவக் கல்லூரியின் 2026ஆம் கல்வியாண்டிற்கான இல்ல மெய்வல்லுனர் போட்டி வைகாசி மாதம் 07ஆம் திகதி கடந்த வியாழக்கிழமை கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது. அருட்தந்தை குயின்சன் பெர்னான்டோ அவர்களின் ஒழுங்குபடுத்தலில் கல்லூரி அதிபர் அருட்தந்தை பெற்றுஸ் தயாபரன் அவர்களின் தலைமையில் தியோகு, பொன்னையா என இரு இல்லங்களாக பிரித்து நடாத்தப்பட்ட இப்போட்டியில் 100m, 200m, 400m ஓட்டம், கயிறிழுத்தல், மெதுவான சைக்கிள் ஓட்டப்போட்டி, வினோத உடை போட்டிகள், புனித மடுத்தீனார் சிறிய குருமட மாணவர்கள், அமலமரித்தியாகிகள் சபை புனித வளனார் சிறிய குருமடம், மற்றும் திருவுளப்பணியாளர் சபை சிறிய குருமட மாணவர்களுக்கான அஞ்சலோட்டம் என்பன இடம்பெற்றதுடன் விளையாட்டு போட்டியை முன்னிட்டு நடாத்தப்பட்ட விளையாட்டுக்கள்

மற்றும் அன்றைய தினம் நடைபெற்ற போட்டிகளில் வெற்றிபெற்ற வர்களுக்கான பரிசில்களும் வழங்கிவை க்கப்பட்டன. இப்போட்டிகளில் தியோகு இல்லம் வெற்றிபெற் றதுடன் இந்நிகழ்வில் புதுக்குடியிருப்பு றோ.க வித்தியாலய அதிபர் அருட்தந்தை றொபின்சன் ஜோசப் அவர்கள் பிரதம விருந்தினராக கலந்து சிறப்பித்தார்.

# உறுதிப்பூசுதல் அருட்சாதனம் வழங்கும் நிகழ்வு



கொய்யாத்தோட்டம் கிறிஸ்து அரசர் ஆலயத்தில் பிள்ளைகளுக்கான உறுதிப்பூசுதல் அருட்சாதனம் வழங்கும் நிகழ்வு பங்குத்தந்தை அருட்தந்தை இராஜேந்திரம் ஸ்ரலின் அவர்களின் ஒழுங்குபடுத்தலில் கடந்த 08ஆம் திகதி நடைபெற்றது. யாழ். மறைமாவட்ட ஆயர் பேரருட்தந்தை யஸ்ரின் ஞானப்பிரகாசம் அவர்களின் தலைமையில் இடம்பெற்ற திருப்பலியில் 18 பிள்ளைகள் உறுதிப்பூசுதல் அருட்சாதனத்தை பெற்றுக்கொண்டனர்.

# கல்விப்பணியாற்றும் யாழ். மாகாணத் தி.கு.க. சபைத் துறவிகளுக்கான கருத்தமர்வு



கல்விப்பணியாற்றும் யாழ். மாகாணத் திருக்குடும்ப க்கன்னியர் சபை அருட்சகோதரிகளுக்கான கருத்தமர்வு கடந்த 30ஆம் திகதி ஆரம்பமாகி வைகாசி 02ஆம் திகதி வரை மாகாணத் திருக்குடும்ப கன்னியர் மடத்தில் நடைபெற்றது. மாகாணக் கல்வி ஆலோசகர் அருட்சகோ தரி சகாயநாயகி பஸ்ரியாம்பிள்ளை அவர்களின் ஒழுங்குபடுத்தலில் மாகாண தலைவி அருட்சகோதரி ஜொய்லின் றாஜி ஸ்ரான்லி அவர்களின் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் உரும்பிராய் றோ.க.த.க பாடசாலை அதிபர் திரு. இக்னேசியஸ் கிளெனி அவர்கள் கலந்து கல்விச் சீர்திருத்தங்கள் மற்றும் மாணவர் மையக் கற்றல் அணுகுமுறை பற்றியும் மகப்பேறு மருத்துவ ஆலோசகர் திரு. றொகான் அவர்கள் கலந்து பெண்களின் உடல்நலம், நல்வாழ்வு, மற்றும் நோய் தடுப்பு விழிப்புணர்வு பற்றியும் பாதுகாப்புக் குழு இணைப்பாளர் அருட்சகோதரி செபோஜினி தலைமையிலான குழுவினர் கலந்து பாதுகாப்பு நடவடிக்கைகள் தொடர்பாகவும் கருத்துரைகள் வழங்கினர். இந்நிகழ்வில் 32 அருட்சகோதரிகள் பங்குபற்றிப் பயனடைந்தனர்.

# "தேவதைகளின் விரல்கள்" நூல் வெளியீட்டு நிகழ்வு



யாழ். மறைமாவட்டக் குருவும் புதுக்குடியிருப்பு பங்குத்தந்தையுமான அருட்தந்தை சிந்தாத்துரை அஜந்தன் அவர்களின் "தேவதைகளின் விரல்கள்" நூல் வெளியீட்டு நிகழ்வு கடந்த 09ஆம் திகதி புதுக்குடியிருப்பு புனித சூசையப்பர் ஆலய வளாகத்தில் நடைபெற்றது. யாழ். மறைமாவட்ட ஆயர் பேரருட்தந்தை ஜஸ்ரின் பேனாட் ஞானப்பிரகாசம் அவர்கள் பிரதம விருந்தினராகக் கலந்து நூலை வெளியிட்டு வைக்க நூலுக்கான அறிமுக உரையை யாழ். பல்கலைக்கழக முன்னைநாள் தமிழ்த்துறைத் தலைவர் பேராசிரியர் சிவலிங்கராஜா அவர்களும், ஆய்வுரையை திருமறை க்கலாமன்ற பிரதி இயக்குநர் திரு. யோசப் ஜோண்சன் ராஜ்குமார் அவர்களும் வழங்கியிருந்தனர். யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் திரு. சிவஞானம் சிறிதரன் அவர்கள் சிறப்பு விருந்தினராக கலந்துகொண்ட இந்நிகழ்வில் அருட்தந்தையர்கள், அருட்சகோதரிகள், பங்குமக்கள், தமிழ் ஆர்வலர்களென பலரும் கலந்துகொண்டனர். மானிட வாழ்வியல் சார்ந்த விடயங்களை உள்ளடக்கியதாக இந்நூல் அமைந்துள்ளது.

# அன்பிய ஊக்குவிப்பாளர்களுக்கான பயிற்சியும் ஒன்றுகூடலும்



யாழ். மறைமாவட்ட அன்பிய ஆணைக்குழுவின் ஏற்பாட்டில் முன்னெடுக்கப்பட்ட யாழ் மறைக்கோட்டப் பங்குகளின் அன்பிய ஊக்குவிப்பாளர்களுக்கான அன்பி யப் பயிற்சியும் ஒன்றுகூடலும் கடந்த 02ஆம் திகதி யாழ். புனித மரியன்னை பேராலய ஆயர் ஜஸ்ரின் மண்டபத்தில் நடைபெற்றது. அன்பிய இணைப்பாளர் கிளரேசியன் சபை அருட்தந்தை இதயராஜ் அவர்களின் ஒழுங்குபடுத்தலில் இடம்பெற்ற இந்நிகழ்வில் யாழ். மறைமாவட்ட அன்பிய ஆணைக்குழு இயக்குநர் கிளரேசியன் சபை அருட்த ந்தை றொனால்ட் சுஜீவன் மற்றும் அன்பிய ஆணைக்குழு வளவாளர்கள் கலந்து அன்பிய ஏழு படிமுறை தொடர்பாகவும் அன்பிய வாழ்வு தொடர்பாகவும் கருத்துரைகள் வழங்கினர். கருத்த மர்வு நிறைவில் திருவிவிலிய ஆசீர்வாதம் இடம் பெற்றதுடன் இந்நிகழ்வில் 58 அன்பிய ஊக்குவிப்பா ளர்கள் பங்குபற்றிப் பயனடைந்தனர்.

# பளைப்பங்கில் அருட்கன்னியர் மடம் திறப்பு விழா



பளைப் பங்கில் பணியாற்ற வந்திருக்கும் வியாகுல அன்னை மரியாயின் ஊழியர்களின் அருட் சகோதரிகளின் இல்லம் ஆயர் அவர்களால் கடந்த 21 ஆம் திகதி ஆசீர்வதிக்கப்பட்டு, சபை முதல்வரால் திறந்து வைக்கப்பட்டது.பங்குத்தந்தை அருட்பணி எஸ்.ஏ.ஜேஜ் அடிகளாரின் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் பல அருட்சகோதரிகளும் அருட்தந்தையர்களும் பங்கு மக்களும் கலந்து சிறப்பித்தார்கள்.

# ஆங்கில மொழி தினப் போட்டியில் மன்னார் மாணவி தேசிய மட்டத்தில் முதலிடம்



கல்வி அமைச்சினால் தேசிய மட்டத்தில் நடாத்தப்பட்ட ஆங்கில மொழித்தினப் போட்டியில் செல்வி. ஜோ.அன்றியா றோச் 1ம் இடத்தைப் பெற்றுள்ளார்.

இவர் மன்னார் புனித சவேரியார் பெண்கள் கல்லூரியில் தரம்-10 இல் கல்வி கற்றுவருகிறார். இவர் இப்போட்டியில் 1ம் இடத்தைப் பெற்று மன்னாரில் வரலாற்றுச் சாதனை புரிந்துள்ளார். தேசிய மட்டத்தில் ஆங்கில மொழித்தினப் போட்டியில் மன்னார் மாவட்டம் முதலிடம் பெற்றமை இதுவே முதல் தடவையாகும். இவருக்கான சான்றிதழ், மற்றும் தங்கப்பதக்கம் என்பன கல்வி உயர்கல்வி அமைச்சு,ஆங்கிலம் மற்றும் வெளிநாட்டு மொழிகள் கிளையினால் கல்வி அமைச்சில் வழங்கி கௌரவிக்கப்பட்டது. மன்னார் மாவட்டம் சார்பாக சாதனை படைத்த தேசிய பாடசாலை புனித சவேரியார் பெண்கள் கல்லூரி மாணவி செல்வி. ஜோ. அன்றியா றோச் அவர்களையும், பாடசாலைச் சமூகம், மற்றும் பெற்றோரையும் வாழ்த்துக்கள் கூறிப் பாராட்டி மகிழ்கின்றோம்.

# கப்புச்சின் சபையின் மேலாளர்களின் வருகை




இத்தாலி நாட்டிலிருந்து வருகைதந்த அகில உலக பிரான்சிஸ்கன் கப்புச்சின் சபைப் பொது அதிபர் அருட்தந்தை றோபேர்தோ ஜென்யுன், சபையின் ஆசிய பொது ஆலோசகர் அருட்தந்தை லோரன்ஸ் சூசைநாதன், மரியாள் அமைதியின் அரசி தமிழக மதுரை மாநில அதிபர் அருட்தந்தை ஆரோக்கியதாஸ் ஆகியோர் அண்மையில் இலங்கை நாட்டிற்கு விஜயம் மேற்கொண்டனர். கடந்த 03ஆம் திகதி இலங்கை நாட்டை வந்தடைந்த இவர்கள் இலங்கையின் தென் பகுதி புனித பியோ மறைப்பணித்தளத்தைத் தரிசித்தனர்.

தொடர்ந்து 07ஆம் திகதி வியாழக்கிழமை முல்லைத்தீவு சிலாவத்தையில் அமைந்துள்ள கப்புச்சின் Capital Campus இனை பார்வையிட்டு அங்கு இடம்பெற்ற மாணவர்களுக்கான சான்றிதழ் வழங்கும் நிகழ்விலும் கலந்துகொண்டனர். Capital Campus இயக்குநர் அருட்தந்தை டேவிட் டொமினிக் அவர்களின் ஒழுங்குபடுத்தலில் இடம்பெற்ற சான்றிதழ் வழங்கும் இந்நிகழ்வில் ஆரிவேர்க் கற்கைநெறியை நிறைவுசெய்த 22 மாணவர்களுக்கும் basic software coding language கற்கைநெறியை நிறைவுசெய்த 06 மாணவர்களுக்கும் outboard mechanic கற்கைநெறியை நிறைவுசெய்த 04 மாணவர்களுக்கும் சான்றிதழ்கள் வழங்கிவைக்கப்பட்டதுடன் இந்நிகழ்வில் இலங்கை கப்புச்சின் சபை மறைப்பணித்தள அதிபர் அருட்தந்தை ஜேம்ஸ் ஜெரிக் குயின்ரஸ் அவர்களும் கலந்துகொண்டார்.

இப்பத்திரிகை புனித வளன் கத்தோலிக்க அச்சக முகாமையாளரால் இல. 360, பிரதான வீதி, யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள அவர்களது அச்சகத்தில் 2026ம் ஆண்டு வைகாசி மாதம் 17ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.